
பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று




# [வாரப்பதிப்பு]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | ... | ரூ 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, | ... | ரூ 4—0 |

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ தனி விகிதமும் உண்டு.

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-ஸ்ரீ ஐப்பசி-மீ 29 உ (14—11—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 29.

## உண்மையான கதர்

கேட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,

காங்கிரஸ் கதர் போர்டுகாரியதரிசி

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜா,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

## சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், ௨ச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-ஸ்ரீ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத் தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

# அசல் ஷண்முகம் பட்டணம் பொடி.

80 வருஷகாலமாக பிரசித்திபெற்றது இந்தியாவில் ஏராளமாய் விற்பனையாகிவருகின்றது,
ஆர். கே. பரிமள மூக்குத்தூள்.

சுமார் 80 வருஷங்களுக்குமுன் மதாாசில் முதல் முதல் தோன்றி உலகமெங்கும் புகழ்பெற்ற அசல் ஷண்முகம் மூக்குத்தூள் என்கிற பட்டணம்பொடியை உபயோகிப்பவர்களுக்கு ஆனந்தத்தையும் சுறு சுறுப்பையும் கொடுத்துவருவது அசல் ஷண்முகம் பொடியே

80 வருஷ காலமாக சென்னையிலே சிறப்புவாய்ந்து ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றுடும் நூற்றுக்கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று,ஜில்லா, தாலூக்கா,டவுன்,கிராமம் முதல் குக்கிரமங்களிலும் கொண்டாடி, வாடை குணம், மணம், கிராம், நிறம், அமையப்பெற்று, நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோபிஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருகிறது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது ஏமாந்துபோகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்! இன்புறுங்கள்!.

என். சாம்பசிவ பிள்ளை ஹெட்கிளார்க் கார்டிக் பேக்டரி, அருவங்காடு:—நான் 34 வருஷ காலமாக அசல் ஷண்முகம் பொடியை உபயோகித்து வருகிறேன் அதன்குணம் நாளது வரையில் கொஞ்சமாவது மாறுதல் கிடையாது.

கே. வி. ரெங்கசாமி அய்யர், வியாபாரி:—நான் 12 வருஷ காலமாக அசல் ஷண்முகம் பொடியை உபயோகித்துவருகிறேன். அது இதர பொடியைவிட குணத்திலும், மணத்திலும், உயர்ந்ததாக இருக்கிறது என்பது என்னுடைய கொள்கை.

கனவான்களே :—

எங்கள் கம்பெனி பொடியை இதர கம்பெனி பொடியோடு சற்று ஒப்பிட்டுப் பாருங்கள். இதர கம்பெனி பொடியை ஓர் சிட்டிகை எடுத்து சில நிமிஷம் வைத்துப் பார்க்கவும். மேற்படி பொடியில் மெடிக்கல் பதார்த்தம் சேர்ந்திருப்பதால் பொடியை சுற்றி வேர்த்து கருமை நிறமாகக் காணும். இவ்வித செயர்க்கையினாலேயே மேற்படி பொடிகள் ஒருவித எரிச்சலான காரமும் உடனே கெட்டுப் போகக் கூடியதுமா யிருககிறது. மேற்படி பொடி மூளைக்கு மிகவும் கெடுதல் உண்டு பண்ணும் என்பது நாம் சொல்லாமலே நன்கு விளங்கும். ஆனால் எங்கள் பொடியோ செயர்க்கை யில்லாமல் இயற்கையாய் தன்னுடைய சுயகுணத்தைக் கொண்டே, யாதொரு கெடுதலையும் உண்டு பண்ணமல் பொடி போடுவோருக்கு ஆனந்தத்தையும், ஆரோக்கியத்தையும், ஊக்கத்தையும், உற்சாகத்தையும், தருமென்பதும், எங்கள் அசல் ஷண்முகம் பொடியை ஒருதரம் போட்டுப் பார்த்தால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும் என்பதற்கும் எங்கள் பொடியை மேலே சொல்லிய பிரகாரம் சோதித்தால் இரண்டுக்குமுள்ள வித்தியாசம் நன்கு விளங்கும்.

அசல் ஷண்முகம் பொடி விலை ஜாப்தா.

| | | |
|---|---|---|
| முதல்தரம் ஒரு வீசை | ... ரூ. | 4—4—0 |
| இரண்டாந்தரம் ஒருவீசை | ... ரூ. | 3—4—0 |

☞ வெளி ஊர்களில் ஏஜண்கள் தேவை விலை விஷயம் இன்றைக்கே எழுதித் தெரிந்து கொள்ளவும்

இதனால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைக்குத்தல் உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படு மென்பதில் சந்தேகமே கிடையாது. காலணு சாதா மூக்குத்தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால் தூள் முழுதும் சுகந்தமாய்விடும்.

1 புட்டி 1-க்கு அணு 0—4—0 டஜன் புட்டிகள் ரூ. 2—4—0
ஒரு சேர் டின் ... ரூ. 1—8—0

ஹெட்டாபீஸ் :—ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி, லிமிடெட், போஸ்ட் பாக்ஸ் 140, மதருஸ்.

வெளியூர் பிராஞ்சுகள் :—மதுரை பிராஞ்சு நே. 5. நகரா மண்டபம், அம்மன் சன்னதி, N. P. பரிமணம் பிள்ளை ஏஜண்ட்.

தேனீ பிரான்சு பெஜார் தெரு நே. 6, ஸி. பி. ஷண்முகம் ஏஜண்ட்.

போள்ளாச்சிபிராஞ்சு நெ. 7, முனுசாமிரெட்டி ஏஜண்ட் சந்தைக்கருகில்

பி. பி. வெங்கட்டராம செட்டியார், பி. பி. நாகரத்னம் செட்டியார் வியாபாரம், தாராபுரம்.

எம். பாபு சாஹிப் & பிரதர்ஸ், வியாபாரம், பல்லடம்.

கே. எஸ். கிருஷ்ணப்ப செட்டியார், ஏ. சுப்பிரமணிய செட்டியார் மளிகை, திருப்பூர்.

பி. நடராஜ பிள்ளை, 4/57, ரங்கே கவுண்டன் வீதி, கோயமுத்தூர்



## "ஆனந்த விகடன்"

இதில் பல அருமையானதும் விடாநகைப்பைத் தருவதுமான விகடங்களும் விகடத்தேவாரம், திருவாசகம், திருபுகழ் முதலிய அநேகப் பாடல்களும், விகடக் கதைகளும், ஞானந்தரும் வியாசங்களும், பலவகை குறிப்புகளும், "முத்தாம்பாள் அல்லது மோகனவடிவு" என்னும் தொடர்பு நாவலும், பஞ்சாங்கமும் அடங்கியுள்ளது. இதை ஒரு தரம் வாசித்தவர்கள் மறுபடியும் வாசிக்காதிருக்கமாட்டார்கள்.

வருட சந்தா ரூ. 2, வெளிநாட்டிற்கு ரூ. 2-8-0
1 அணு ஸ்டாம்பு அனுப்ப மாதிரி இனும்.
[மாத சஞ்சிகை] ஆனந்த விகடன், ஆபீஸ்.
சௌகார் பேட் போஸ்டு, ஜி. டி. மதருஸ்.



## வில்வாதி இலேகியம்.

பித்த வாயுவுக்கும் அஜீரணத்துக்கும்.

ஆகாரம் ஜீரணமாகாமல் ஏற்படும் வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, ஏப்பம், மார்நோய், பக்கநோய், முதலியவைகளை மூன்று பொழுதில் நீக்கக் கூடியது. பத்தியமில்லை.

40 வேளை சாப்பிடக்கூடிய இலேகியம் ரூ, 1—8—0.



## நம்பிக்கையான வியாபாரஸ்தலம்.

சகல விதமான புஸ்தகங்கள்
கதர் துணிகள் மருந்துகள்
கடிகாரம் ஷராட் சாமான்
முதலிய இதர எல்லா
சாமான்களும்
கிடைக்கும்.
முன்பணத்துடன் ஆர்டர்
அனுப்பவும்.

விலாசம்:—
**என். தண்டபாணி கம்பெனி.**
தபால் பெட்டி 292.
6-99 பவழ [illegible] தெருவு,
சென்னை.



## மஹேந்திரஜாலம்

இது சென்ற மஹா யுத்தத்தின்போது ருஷ்யாவைத் தலைகீழாக வீழ்த்திய மாயா வினோதப் பாதிரி ரஸ்புட்டீனின் மெய்யான சரித்திரம். இதனால் ஆஷாடபூதிகாளின் வேஷத்தை யறியலாம். பாதிரியின் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தபாற் செலவுடன் ரூ. 1 0 0

மணவாழ்க்கை மர்மங்கள்.
படங்களுடன் விலை ரூ. 2 0 0

பண்டிதை மேஸ்மேரிஸா
படங்களுடன் விலை ரூ. 1 8 0



## கண் தைலம்.

சிறந்த அனுபவ நேத்ர ரோக நிவாரணி.

இம்மேன்மையான தைல ஸ்நாநத்தால் கண் நோய், கண் குத்தல், கூசல், நீர் வடிதல், கண் மங்கல், மேகநீரால் குருடாதல், அந்திமாலை, பீளை கட்டல், மாமிசம் வளர்ந்திருத்தல், பூவிழுதல், கண் சிவப்பு, கண் இமை புருவங்களில் வலி, கண் புகைச்சல், தலை நோய்களும குணமாகிவிடும். கண் குளிரும், ஒரு டின் ரூ. 3. வி. பி. அணு 8.

பிரஜானுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.

# தமிழரியக்கம்.

## தற்கால நிலை

(17-10-26-உ இதழின் தொடர்ச்சி.)

சென்ற இதழில் தமிழர்களுக்குள் பலதிறப்பட்ட ஜாதி வேற்றுமைகள் பார்ப்பனரால் ஏற்பட்டதென்றும், தமிழர் அடிமைத்தனம் எப்படி உண்டானதென்றும், பிராமணர், எத்தன்மையானவர்களென்றும் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டன. இப்பொழுது சமுதாய வாழ்க்கையில்; பிராமணர்கள் முன்னிருந்த நிலைமையும், தற்கால நிலையையும்பற்றி சற்று கவனிப்போம்.

### பிச்சைக்கதிபதிகள் பிரபுவானார்கள்.

நமது முன்னோர்கள், புத்தகங்கள் படித்து பட்டதாரிகள் ஆனதில்லை. ஆனால் கேள்வியும், அநுபவஞானமும் அதிகமாய் உடையவர்கள். ஆரியர்கள் இவ்விடம் குடியேறி தங்கள் பாஷையும், கொள்கையும், மதத்தையும், பரப்பினபோதிலும், நம்முன்னோர்கள் தங்களுக்கு வேண்டியதைமாத்திரம் எடுத்துக்கொண்டார்களே ஒழிய பூராவும் தங்களை ஆரியர்களிடம் ஒப்பு அடைக்கவில்லை. சமுதாய வாழ்க்கையில் உபதேசியாகவும், பஞ்சாங்கியாகவும் பிராமணர்களை ஏற்றுக்கொண்டாலும, கைப்பொருளை அவர்களிடம் கொடுத்துவிடவில்லை. ஷை ஆரியர்களை தங்கள் கடமையைச் செய்யச் சொல்லி, அதற்காக அவ்வப்போது அவர்களுக்கு போஷணைக்கு உதவிவந்தார்கள். ஆரியர்கள் தங்களுக்கு மேலான பதவி கிடைத்ததனால் சந்தோஷத்துடன் மற்றவர்கள் சரியான நிலையில் உஜ்ஜீவிக்கவேண்டுமென்று, யாகங்கள், எக்கியங்கள், விரதங்கள், நோன்புகள், முதலியனசெய்து காட்டியும், தழைவேய்ந்த குடிசைகளிலும், மரவுரிக் கோலத்துடன், தங்கள் "ஆத்மீக ஞானத்தை விர்த்திசெய்து வந்தார்கள். இந்நிலையில் தேசமெங்கும் க்ஷேமமாய் மாதமும்மாரியும், ஆலயங்கள் ஆயிரக்கணக்காய் ஏற்பட்டு எங்கு பார்த்தாலும், புராணக் கதாகாலக்ஷேபங்களும், பஜனங்களும், சுவாமி ஆராதனைகளும் மலிந்து நின்றன. மதக் குருக்களாகவும், கோவில் பூசாரிகளாகவும், ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். இவ்வித உன்னத பதவி அடைந்த பின்னர் காலஞ் செல்லச் செல்ல அவர்கள் சுயநலப் பிரியர்களாகிவிட்டார்கள். தங்கள் ஸமஸ்கிருத பாஷையை எல்லோருக்கும் கற்றுக்கொடுத்தால், தங்களுக்குண்டான ஆதிக்கம் குறைந்துவிடுமென்றும் தங்கள் பாஷையிலுள்ள உயர்தர பொருள்கள் அல்லது ஊழல்கள் பிறருக்குத் தெரியா வண்ணம், கட்டுப்பாட்டினால், சூத்திரர்கள் படிக்கக்கூடாதென்றும் அப்படி படித்தால் பாவமென்றும் கதை கட்டினார்கள். அம்மாத்திரமா தமிழிலிருந்த அநேக அற்புத நூல்களை தங்கள் பாஷையில்மொழிபெயர்த்து ஸமஸ்கிருதமே ஆதியென்று தோன்றும்படியாகவும் தமிழ் பாஷை பிற்காலத்தில் ஏற்பட்டதாகவும் நம்பும்படியாகவும் செய்து, அருமையான தமிழ் நூல்களையும் சிதைத்தார்கள். தங்கள் ஸமஸ்கிருத பாஷையை விலைக்கு விற்பவர்களானார்கள். இத்துடன் சமுதாய அந்தஸ்தில் அதிக பதவிபெற்றதும் பிறவியிலேயே தாங்கள் மேன்மைப்பட்டவர்கள்; மற்றவர்கள் தாழ்ந்தவர்களென்னும நம்பிக்கையையுண்டுபண்ணினார்கள். தமிழர்கள், பிறதேசம் சென்று அங்குள்ள நாகரிகங்கள் அறியப்போதிய சக்தி குன்றியவர்களாகியும் இருந்தார்கள். பார்ப்பார்களை தெய்வமென்று நம்பினார்கள். தமிழ் மொழியில் உள்ள கவுரவத்தையும் நுட்பத்தையும் மறந்தார்கள். மாதா வயிறெரிய மஹேஸ்வர பூஜை செய்ததுபோல், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி என்னும் தெய்வ அருள்வாக்குகளினால், கோவில்களில் சுவாமியை பிரார்த்தனை செய்வதைவிட்டு பிராமணர்களைக்கொண்டு நமக்கு அர்த்தம் விளங்காத ஸமஸ்கிருதச் சொற்களால், அரச்சனை, ஆராதனைகள் செய்வித்தார்கள். ஷை அர்ச்சனைகளும் உள்ளன்புடனும் திருவருள்கொண்டு செய்யப்படுவதில்லை. அர்ச்சனைகளும் காசுக்குத் தகுந்தபடி ஏற்பட்டன. தமிழ்த்தாய் வயிறு கொதிக்கிறது. காசுக்காக கூலிக்குச்செய்யும் அர்ச்சனை, ஆராதனைகளால், கடவுள் எம்மட்டிலும் பிரீதி அடைவாரோ நம் தமிழ் மக்கள் தான் அறியவேண்டும்.

“அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார், அன்பே சிவமாவது யாரும் அறிகிலார் அன்பே சிவமென்று யாரும் அறிந்தபின், அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே” என்றது பெரியார்வாக்கு. அன்பின்வழியே செய்யாத பூஜை அன்பே உருவாக இருக்கும் ஈசன் ஏற்றுக்கொள்ளுவாரா?

“நட்டகல்லை தெய்வமென்று நாலுபுஷ்பம் சாத்தியே, சுற்றிவந்து மொணமொணென்று சொல்லும் மந்திரமேதடா, நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில், சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ” என்ற பெரியார் வாக்குக்கு இணங்க உண்மைக் கடவுளையும் தமிழையும் மறந்து கல்லையும் ஸமஸ்கிருதத்தையுமே மதித்த பாவம் நம்மைவிட்டகலுமா? அன்னை வயிறு எரிந்தால், ஆருயிர்க்கு மோட்சமெங்கே? தமிழ் மக்களே! நன்றாய் கவனியுங்கள். தமிழ்த் தாயை தாழ்த்தியவர்களுக்கு தண்ணருள் செய்யலாமா?

“சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால், நீதிவழுவா நெறி முறையின்— மேதினியில், இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர், பட்டாங்கிலுள்ளபடி.” என்ற பெரியார் வாக்குக் கிணங்க, ஜாதி இரண்டைத் தவிர வேறு இல்லாமல், நிலவி இருக்க, நமது ஆரிய சகோதரர்கள் நாலு வர்ணங்களுண்டுபண்ணி படைப்பிலேயே தாம் பெரியார்களென்றும், ஏனையோர்கள் தமக்கு இழிந்தவர்களென்றும், செய்த பெரிய கொடுமையைச்சொல்ல ஆயிரம் நாப் படைத்த ஆதி சேஷனாலும் முடியுமோ!

“பற்பல நாட்டிலும் பார்ப்பனரில்லையால், முற்படைப்பதனில், வேறாகிய முறைமை போல், நால்வகைச்சாதியும் நாட்டினில் நாட்டினீர், மேல்வகை கீழ்வகை விளங்குவது ஒழுக்கால்” என்றார் கபிலரும். பிறப்பிலேயே பிராமணன் சூத்திரனென்று இருந்தால், எல்லா தேசங்களிலும் மேற்படி பிராமணன் இருக்கவேண்டாமா? பிராமணர்கள் செய்த மாயவலையில் அகப்பட்டு, மதிமயங்கிப்போனோம். ஷையார்களுக்கு பிறப்பு உரிமை இருப்பதாக நம்பிக்கை வைத்தோம்; தமிழ் மொழியில் அசட்டையினாலே, கபிலர் மேற்சொன்ன வாக்கியத்தையும் மறந்தோம். இச்சமயம் நமது குருட்டு நம்பிக்கை நீங்கவும் கல்லாயிருக்கும் தெய்வம் இனியாவது அன்பு வழிலே அருள்படத் தொழவும், வழிகாணவேண்டும்.

பிராமணர்கள் பிறப்பினாலே கல்விக்கு உரியவர்கள் தாங்களே என்று பரப்பி இருந்த மாயவலை இனி செல்லாது என்று கண்டுவிட்டோம். மேல் நாட்டின் நாகரிகக் கண்ணாடியில் பார்க்க ஆரம்பித்தவுடன் பிராமணோத்தமர்களின் புழுதி மாயங்கள் வெள்ளிடைமலைபோல் விளங்கலாயின. ஆனால் எக்காலத்திலும் புத்திமான் பலவான்; மதத்தின் பெயரினால் தாங்கள் கட்டிய ஆகாயக்கோட்டைகள், மேல்நாட்டு லோகாயுத வெடிக்குண்டுகளுக்குத் தாங்கா என்று பிராமணர்கள் கண்டார்கள். மதப் பிரசாரத்தைக் கைவிட்டு அரசியலில் கலந்தார்கள். ஆங்கிலப் படிப்புஅவர்களுக்குச் சாதகமாகவும் ஏற்பட்டது. கல்வியினால் முன்னாளிலிருந்து பிழைத்து வந்ததால் கல்வியின் அருமை, பெருமை, நன்மை சுலபமாக தெரிந்து மூடனுக்கும் படிப்பின் பேரில் ஆசை கொடுக்கக் கூடிய “எதிர் ஜாமீன்” என்ற ஏற்பாடுகள் கல்யாணத்தில் வைத்துக் கொண்டார்கள். பஞ்சாங்கக் கட்டை சுருட்டி பரணையில் ஏற்றினார்கள். தாங்கள் பிராமணர்கள் என்று சொல்லிக் கொள்வதற்கு அறிகுறியான சில சடங்குகளும், பூணூலும் தான் பிராமணர்களிடம் எஞ்சி நிற்கின்றன. எந்த அரசாங்க இலாகாவிலும், அவர்களே நுழைந்தார்கள். சுருக்கிச் சொல்லின் தற்போது தமிழ் நாட்டின் அரசாங்கம் பிராமண அரசாங்கமென்றே சொல்லிவிடலாம். தமிழர்களுக்கு தங்கள் உறக்கம்தீர இத்தனைநாட்களாயின. உறக்கத்திலிருந்து விழித்தும், கண்மயக்கம் தீரவில்லை.

ஐயோ! பாவம் எத்தனை நூற்றாண்டுகளாக மூளையின் பிரயாசையின்றி இருந்தவர்கள் சீக்கிரத்தில் அந்நிய பாஷையை கற்பதென்றால் சுலப மாகிறதா? சுலபமாய் படிக்கும்படியான ஏற்பாடுகளும் அவர்களுக்கு உண்டா?

ஏதோ இங்கு ஒருவன் அங்கு ஒருவன் ஆங்கிலம் படித்து அரசியல் இலாக்காவில் அமர்ந்திருப்பனேல் அவன் பாடு ஆண்டவனே அறிவான்! கீழேயும் பிராமணன், மேலேயும் பிராமணன், சுற்றிலும் பிராமணன். இவர்களுக்கு மத்தியில் ஒரு அற்ப பிழையும் மலையாக வளர்த்தப்பட்டு அவன் (பிராமணனல்லாதான்) பதவி விர்த்தியில் அழுத்தப்படுவான். மலைபோல் செய்யப்பட்ட நல்ல பெரிய வேலைகளெல்லாம் அற்பமாகி அவனுக்கு ஒன்றும் உதவாதபடி செய்யப்படும். மேல் அதிகாரிகள் கண்ணில் சரியானபடி அவைகள் சமயம் வந்த காலத்தில், காட்டவும் படா. தோட்டி முதல் தொண்டைமான் வரையில் அரசாங்கப் பதவியில், கீழும் மேலும் தவிர (அதாவது தாழ்ந்த வேலை செய்யும் தோட்டியும், ஜனநாயகப் பொறுப்பு தோள் மேல் தாங்குவது ஆகிய

## கொங்கு வேளாள வாலிபர்க்கோர் மாபெரும் விண்ணப்பம்.

### "சுயமரியாதை தேடுங்கள்"

**நேயர்காள்!**

கட்சிப்பிணக்கும் வகுப்புத் துவேஷமும் சுயநலப் பார்ப்பனர்களால் இன்று அரசியலுலகிலே விதைக்கப்பட்டிருத்தலால், கண்ணியமுள்ள எவரும் இப்பார்ப்பனக் குழாங்களுடன் சேர்ந்துழைக்க முடியாதென்றெண்ணி, நமது மாபெருந் தலைவர் நமது அன்பைக் கவர்ந்த செல்வச் சீமான் வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்கள் அரசியல் சேவையினின்றும், சற்றே விலகி நிற்கின்றார் போலும்! அரசியற் காற்று, அவர் மீதும் நம்மீதும் சிறிது காலத்திற்கு வீசாதிருக்குமாறு நாம் எல்லாம் வல்ல சிவனை வழுத்துவோமாக.

நாம், நமது வயலின்மீதும், மேடு, காடுகளின்மீதும், பண்டங்கன்றுகள்மீதும் நமது கவனத்தைச் செலுத்துவோம்! கொழுத்துக் குதித்துத் திரியும் நமது காளைக் கன்றுகள் எங்கே? பசேலென்று நமது கண்களைக் குளிரச்செய்யும் பசும்புல் வளர்ந்தடர்ந்த மேய்ச்சல் நிலங்களெங்கே? மலைபோற் குவிந்து கிடந்த நமது வைக்கோற் தட்டுகளெங்கே? தவசக் குழிகள் எங்கே? தானியக் குன்றுகளெங்கே? அகன்றமார்பும், வளர்ந்த மீசையும் படைத்திருந்த நமது ஆண் சிங்கங்கள் எங்கே? இலக்குமி கடாட்சம் வீசப்பெற்ற நமது பெண்டிரும் கிராம வனப்பும் எங்கே? எங்கே?

இன்று நாம் காண்பதென்ன? நல்ல மழை மாரியின்றி, விளைச்சல் கெட்டு நமது சமூகத்தார் கடன்காரர்களாகி பூமிகளை வட்டிக்கடைக்காரச் செட்டிகட்கும், வம்பியற்றிப் பொருள் பறிக்கும் பார்ப்பன வக்கீல்களுக்கும் மாற்றுங்காட்சி யொன்று. எலும்புந் தோலுமாய் நடக்கவுந் திறனற்ற கால் நடைகள் மனிதனுக்கும், மாட்டுக்கும் உதவாப் பணப் பயிர்கள் குறைவான உணவாலும், அதிகமான உழைப்பாலும், மன சஞ்சலத்தாலும் பலங்குன்றி, முதுகு வளைய நடக்கும் உழவர், வீட்டிலும் காட்டிலும் வேலையின்றி, நாணமின்றி, வெட்கமின்றி, பட்டணங்களிலே விறகும், புல்லும், பாலும், மோரும், காயும், கசம்பும் விற்றலையும் நமது பெண்மணிகள் நோயும் துற்கந்தமும் சதா குடிகொண்டிருக்கும் கிராமங்கள் போதும்! இத்துடன் போதும்!

நாம் எவ்வளவு கட்ட நட்டப்பட்டாலும், நம்முடைய உழைப்பினால் வயிறு வளர்க்கும் ஒரு வர்க்கத்தார் உளர். இவ் வர்க்கத்துக்கு 'குருக்கள்' என்று பெயர். வருடமொருமுறை கலெக்டர் 'ஜமாபந்தி'போல் இக்குருக்கள் கூட்டம் வில்லைச் சேவகருடன் புறப்படுகின்றன. மணியோசையும் கொம்போசையும் முழங்குகின்றன. முழங்கவே நாம் கூடுகிறோம். சாமி சாமியெனக் கை கூப்பிக் கும்பிடுகிறோம். இக்குருக்கள் தங்கள் மலங்கழுவு மிடதுகையை மடக்கிச் சற்றுயர்த்தி சாடை காட்டுகிறார். எருத்துக்குப்புல், ஆளுக்குச் சாப்பாடு, குருக்களுக்கு சமையற் சாமான்கள், ஒரு தனி வீடு எல்லாம் தயாராக்கி விடுகிறோம். குருக்கள் குளித்துத் துவைத்துச் சமைத்து விலாப் புடைக்க உண்டு உறங்குகிறார். எழுந்தபின் கணக்குப் புத்தகத்தை யெடுக்கிறார். ஒவ்வொரு பெயராய்ப் பார்த்து விசாரிக்கிறார். ஐந்து, பத்து, இருபது, முப்பதாகக் கொடுக்கிறோம். எல்லாம் நல்ல மூட்டையாகக் கட்டிக்கொண்டு போய்விடுகிறார். அவர் ஒன்றும் சொல்வதில்லை; நாமொன்றுங் கேட்பதுமில்லை. குருக்கள் கொழுத்த காளைகள் பூட்டிய அழகிய வண்டியில் நாலாட்களுடனும், வைர மோதிரக் கடுக்கனுடன் வந்திறங்கினவுடனே நாம் பெருமையுடன் நமது குருக்கள், சுவாமிகள், பெரிய சுவாமிகள், ஆயிரம் ஆயிரமாய்க் கந்தாயம் செலுத்துபவர் என்று பேசி ஆனந்தப் படுகிறோம். உலகத்தில் ஆண்டவன் சிருட்டியிலே எத்தனையோ அதிசயங்கள் இருப்பதாகச் செப்புகின்றனர். எனினும் இதற்கிணையான அதிசயம் வேறொன்றுளதோ? எண்ணிப்பாருங்கள். "பிச்சையேற்போரைப் பணிந்தும்," "நம்மை எய்ப்போருக் கேவல்செய்தும்" நாம் வாழ்வது அதிசயமல்லவா?

### நாம் செய்யவேண்டுவதென்ன?

1. நம்மைத் தாழ்த்தி, தங்களை உயர்த்தி நமது உழைப்பால் வயிறு வளர்க்கும் இப்பார்ப்பனக் குருக்களை நாமொழிக்கவேண்டும். இக்குருக்களால் நாமடையும் பெருமையென்ன? இவர்கள் நமக்கேன்? அறிவாளிகள் கூறுமின்!

2. நாம் கதரைப் பரப்புவோமாக. கதர் என்பது 'குடிநூலால்' நெய்யப்பட்ட துணியாகும். 'குடிநூல்' என்பது நமது கொங்கு வேளாளப் பெண்மணிகளால் நூற்கப்பட்டதாகும். நூல் நூற்பதால் நமது பெண்மணிகள் சாகாமல், நோகாமல் ஜீவிக்கமுடியும். அவர்கள் கற்பு புல்லுடனும், தயிர் பாலுடனும், காய் கசம்புடனும் பட்டணத் தெருக்களிலும், பார்ப்பனக் காப்பி ஓட்டல்களிலும் விற்கப்படாமல் நிற்கும். கதருடுத்துவதால் நமதாண்மையை நாம் காத்தவராவோம்.

3. மதுபான உற்பத்தியையும், கடையையும், குடியையும் நாமொழிக்கமுயலுவோமாக இத்துறையிற் பெரியோர் முயன்று ஒற்றுமைக்குறைவால் பின்வாங்கிவிட்டனர். வாலிபராகிய நாம் முனைந்து நின்றால் எட்டே நாட்களில் கட்டாயம் கள்முட்டிகளொன்றேனும் இல்லாதொழிக்க முடியும். நிச்சயமாய் முடியும்.

இதுவேபோதும், பார்ப்பனர் பிடித்தத்தினின்று விடுபட்டு நமது சுயமரியாதையைக் காப்பாற்றுவது அன்னியநாட்டு ஆடைகளை விட்டு விலக்கி, நமது குடிநூலைப்பெருக்கி கதராடை உடுத்தி நமது பெண்களை ரட்சிப்பது, கட்குடியை விலக்கி அறிவையும், உணர்வையும், அருளையும் மிளிரச்செய்வது ஆகிய இத்திருக்காரியங்கள் மூன்றில் நாமின்று முற்பட்டு நின்றால் போதும்.

நமக்குப் பெரியோர் துணைவேண்டும். எனினும் பெரியோர் தலையில் வேலை சுமத்தாமல், நாம் வேலையேற்று பெரியோர் துணைகொண்டு உழைக்கவேண்டும். வீண்கூட்டம் அட்டகாசம், வீரப்பேச்சுகள், இதோபார், அதோபார், நான் சாதித்துவிடுகிறேன் என்ற சொற்களின்றி, நாம் அமைதியாய், கவனமாய், சிறியதாய் ஒரு கூட்டங்கூடி, வாலிப சங்கமொன்று கண்டு, வேலைத்திட்டங்களமைத்து, ஒழுங்காய், நிதானமாய் வேலை செய்ய யோசிக்கவேண்டுகிறேன்.

நேயர்களின் அபிப்பிராயத்தை "குடி அரசு" மூலமாக எதிர்நோக்கும், ஊழியன்,

அய்யாமுத்து.

---

தொண்டைமான்(அரசன்) தவிர மற்றஎல்லா பதவிகளும் அவர்களுக்குள்ளேயே (பிராமணர்களுக்குள்ளேயே)இருக்கின்றன. பிராமணரல்லாதார் வந்தால் அவன் எப்பொழுது கால் சருக்குவான் உயிரோடு புதைத்து விடலாம் என்று எல்லாப் பிராமணர் கண்களும் இவன் பேரிலேயேதான் நிற்கும். பிழை செய்தல், மனித இயற்கை. இத்தனை கண்களுக்கு முன்னால் பிழையே இல்லாமல் ஒருவன் வேலை செய்வதென்றால் சாத்தியமாகுமா? "வேண்டாத பெண்சாதி கால் பட்டால் குற்றம் கை பட்டால் குற்றம்" இந்நிலையில் பிராமணரல்லாத கீழ்தர உத்தியோகஸ்தர்களுடைய பாடு ஈசனே அறிவான்! இம்மாத்திரமா! பிராமணன் தன் மேல்உத்தியோகஸ்தன் என்ன மனோ பாவமுடையவனென்று நன்றாய் தெரிந்து திருப்தி செய்வதிலும் எக்காரியமானாலும் செய்து தன் சுயநன்மை அடைவதில் பின் வாங்கான். அவனுக்கு அவ்விதமாய் அறிவதற்கு வேண்டிய சாதகங்களும் சகாக்களும் எந்த அரசியல்படிகளிலும் மலிந்து இருக்கின்றன.

பல தொழிலும் செய்து தேக பிரயாசையின்றி உடல் வருத்தமில்லாமலே நெற்றி வேர்வை துளிக்காமலே தந்திரமாக அரசியல் தொழில்களிலே அமர்ந்து வேண்டிய மட்டிலும் நம்மை பல வழியிலும் ஈர்த்து ஈர்த்து கைப்பொருளை வழிப்பறி கொள்ளைக்குமேலாக அகாயசமாகத்தட்டிப்பறித்து பிச்சைக்கு அதிபதிகள் பிரபு ஆனார்கள். பிராமணர்கள் தங்களுடைய சுய நன்மையை விட்டுக் கொடுப்பார்களா? உங்களுடைய நன்மையைக் கோரிய சட்டங்கள் ஏற்பாடு செய்வார்களா? செய்யும் சட்டங்களெல்லாம் தங்களுக்கு சௌகரியமாக ஏற்படுத்தி கொள்ளுவார்களே அல்லாமல் ஏழை மக்களாகிய உங்களுக்கு ஒரு நாளும் ஒரு நன்மையும் செய்வார்களா என்பதை நீங்களே அறிந்து கொள்ளவேண்டும்.

(தொடரும்.)

தமிழ் நாட்டு நண்பன்.

---

## சென்னை சேப்பாக்கம்.

### இந்து பாலபாடசாலை மாணவர் சங்கம்.

ஷை சங்கம 23-10-26 தேதி மாலை ஆசிரியர் வி. ஜே. முனிசாமி முதலியாரவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. அவ்வமயம் ஷை சங்க காரியதரிசி ஸ்ரீமதி கே. சாவித்திரியம்மாளாலும் கே. இராஜாம்பாளாலும் கடவுளைப்பற்றி ஓர் சம்பாஷணை நடைபெற்றதோடு திருவாளர்கள் நாராயணசாமி, என். ஏ. நடேச முதலியார் எஸ். இரத்தினவேலு பிள்ளை, பி. ஏ. ராமதாஸ் முதலியார் ஆகியோரும் பேசினார்கள். தலைவர் முடிவுரை கூறிய பின்னர் வந்தனோபசாரங் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிவு பெற்றது எனக் காரியதரிசி ஸ்ரீமதி சாவித்திரி அம்மாள் அறிவிக்கிறார்.

## சூத்திரன் என்பதற்குத் துன்பத்தைக்களைகிறவன் என்பது பொருளானால் கழுதைக்கும் நாய்க்கும் பன்றிக்கும் ஏன் பொருந்தாது?

(கைவல்யசாமியார் எழுதுவது.)

ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்கள் சூத்திரன் என்பதற்கு வேசி மகன் என்று பொருள் கொண்டுவிட்டதைப் பொய்ப்பிக்க சென்னையில் சுயராஜ்யக் கட்சிக்காரர்களின் பிரசங்க மேடையில் "சூத்திரன்" என்பதற்குத் துன்பத்தைக்களைகிறவன் என்று அர்த்தம் சொன்னதாகவும் எல்லோரும் கைதட்டி ஆரவாரம் செய்ததாகவும், சுதேசமித்திரனில் எழுதப்பட்டிருந்தது. உங்களை ஏமாற்றும் பார்ப்பனப் பத்திரிகையின் சுவாபவத்தை நீங்கள் தெரிந்ததாக அதற்குத் தெரிகிறவரையில் உங்களை அழுத்திவைக்க இம்மாதிரி எழுதியே தீரும். சாஸ்திரங்களிலும் அநுபோகத்திலும் "சூத்திரன்" என்கிற பதத்திற்கு என்ன அர்த்தமோ அதை உங்களுக்குச் சொல்லுகிறேன். உண்மையைத் தெரிந்துகொள்ளுவதும் பார்ப்பனர் உங்களைக் கேவலமாக வைத்திருப்பதும் நீங்கள் தெரிந்துகொள்ளுவது உங்கள் காரியம். நாளுக்குநாள் அறிவும் விருத்தியாகும் இந்தக் காலத்தில் இவ்விதமான அக்கிரமங்களை ஒழிக்க நீங்களெல்லாம் தயாராயிருக்கவேண்டும். பார்ப்பனரை திட்டுவதோடு நிற்காமல் எம்மை ஏன் அப்படிச்சொல்லுகிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும்.

கவுண்டர், முதலியார் பிள்ளை, நாயுடு, நாயக்கர், தேவர், உடையார் முதல் எல்லா உயர்ந்த தென்தேச ஜாதியார்களும், பணக்காரன், படிப்பாளி, வித்வான் முதல் யாராயிருந்தாலும் சூத்திரன் என்னும் இழிவோடு அழைக்க வருகிறார்கள் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. சூத்திரன என்னும் வார்த்தைக்கு வைப்பாட்டி மகன் தாசி மகன் என்பது சந்தேகமற, மனுதருமசாஸ்திரத்தின் பிரமாணத்தாலும் மலையாளத்து அநுபோகத்தாலும் "குடி அரசு", நிச்சயப்படுத்திவிட்டது. "சூத்திரன்" பாதத்தில் பிறந்தவன்; மூன்று வருணத்தாருக்கும் ஏவல் செய்கிறவன்; அடிமை; யாதொரு சுதந்திரமும் இல்லாதவன் என்று இந்துமத சம்பந்தமான எல்லா புஸ்தகங்களிலும் எழுதப்பட்டிருக்கிறது. அநேக காலமாக எல்லோரும் கேட்டுவந்த பழக்கமுமிதுவே. நாலு வருணங்களைப்பற்றி பிருகு மகரிஷி சொல்லிவந்த இடத்தில் "எப்பொழுதும் எல்லாவற்றையும் புசிப்பதில் உற்சாகமுள்ளவனும் எல்லாவித தொழிலும் செய்கிறவனும் சுத்தியில்லாதவனும் வேதத்தைவிட்டவனும் ஆசாரமில்லாதவனும் எவனோ அவன் சூத்திரன்" என்று சொல்லியிருக்கிறார். பாரத்துவாசம் உபதேசமாவது "பொய்யிலும் இம்சையிலும் பிரியமுள்ளவர்களும் லோபிகளும் எல்லாத் தொழிலையுமடைந்து ஜீவிப்பவர்களும் பரிசுத்தத்திலிருந்து நீங்கியவர்களும் தாமதமான மனதுணத்தையுடையவர்களும் சூத்திரர்களென்று" சொல்லுகிறது. வீரசிம்மன் செய்த அமரமென்னும் வடமொழி நிகண்டில் சூத்திரன் என்னும் பதத்திற்கு கிலேசமுடையவன் என்று அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. கிலேசம், துக்கமடைகிறவன், சஞ்சலப்படுகிறவன் என்கிற பொருளே ஒழிய எங்கும் துன்பத்தைக்களைகிறவன் என்னும் அர்த்தமில்லை. மூன்று வருணத்திற்கும் அடிமைத்தொழில் செய்கிறவன் துன்பத்தை களைபவனே. துன்பத்தைக் களைகிறவன் என்னும் அர்த்தத்திலெடுத்து பிராமணன், சூத்திரனுக்கு தோஷம் கற்பித்து விலக்காமலிருந்திருந்தால் சுயராஜ்ய கட்சிக்காரர்கள் சொல்லுவதில் கொஞ்சம் திருப்தியடையலாம். அதை புஸ்தகத்திலும் காணோம் நித்திய அநுபோகத்திலும் காணோம் "அவன்மேல்படாதே அவன், சூத்திரன்; சூத்திரன்கூட சாஸ்திரம் படிக்கலாமா; சூத்திரனுக்குக்கூட இந்த பண்டிகை உண்டா! சூத்திரனுக்குத் தண்ணீர் கொடுத்தால் சேஷப்பட்டுவிடும்; நாம் சாப்பிட்டுத்தானே சூத்திரனுக்குப்போடவேண்டும்" என்பதும் கோவிலுக்குள் போகும்நம்பெண்களை, பாப்பாத்திகள் அடேஇட்டு, அடேசேஷா, சூத்திரச்சிகளை எட்டிப்போகச் சொல்லேன் ஐந்துமுண்டைகள் சந்நிதியை அடைத்துக்கொண்டு நிற்கிறார்கள் உள்ளே எப்படிப்போவது என்பதான இப்பேர்ப்பட்ட விஷயங்கள் தினமும் நடக்கும் காரியம். எவ்வளவு பெரியவனாயிருந்தாலும் தமிழ் நாட்டானை சூத்திரனென்று சொல்லிவந்த காரணத்தால் கீழ்ப்படுத்துகிறார்கள் என்பதற்கு அநேக விவகாரங்களிருப்பதால், பட்டணத்திற்குசம்பந்தப்பட்ட ஒன்றைச் சொல்லுகிறேன். கோயமுத்தூர் ஜில்லாவைச்சேர்ந்த ஒரு பெரிய கிராமத்தில் பெரிய பார்ப்பன பணக்காரன் வீட்டில் கலியாண பாட்டுக் கச்சேரி நடந்து முடிந்ததும் மூன்று வித்வான்களில் இரண்டுபேர் பார்ப்பனர் ஒருவன் பார்ப்பனரல்லான், இரண்டு பார்ப்பனர்களுக்கு மாலை போட்டார்கள். சூத்திரனென்னும் காரணத்தால் மற்றவருக்கு மாலை போடாமல் விட்டுவிட்டார்கள். அவர் யார் என்றால் மிருதங்கம் ஸ்ரீமான் அழகநம்பி பிள்ளையவர்கள். இவை சபையில் நடந்த விஷயம். சூத்திரன் துன்பத்தைக் களைகிறவனாயிருந்தாலும் சூத்திரன் என்கிற வார்த்தை தாழ்மையை உண்டு பண்ணியிருக்கிறது. உண்டு பண்ணுகிறது. உண்டு பண்ண சுயராஜ்யக் கட்சி பிரயத்தனப்படுகிறது அதற்காக கூலிக்கு ஆளும் வைத்திருக்கிறது. அழுக்கு மூட்டை எல்லாம் சுமந்து துறையில் இறக்கி வெள்ளை மூட்டையாய் வீடுவந்து சேர்க்கும் கழுதையைவிட துன்பத்தைத் தீர்க்கும் பிராணி உண்டா! கழுதை என்று கூப்பிட்டால் துன்பத்தைத் தீர்க்கும் ஜந்துதானே என்று திருப்திப்படுகிற மனிதனுண்டா! மனிதனுக்கு துன்பம் வருமுன்னே காக்கும் மிருகமல்லவா நாய்! நட்புச்சேவகன் என்கிற பேருமதற்குண்டே! யாராவது நாயே வா என்றால் ஒத்துக்கொள்ளுவார்களுமுண்டா? நம்முடைய அசுத்தத்தை சுத்தப்படுத்துவது பன்றி. அது வீரருக்கும் வேந்தருக்கும் உணவுமாகிறது; இதைவிட உபகாரமான ஜெந்து உண்டா! பன்றிக் கூட்டமே வாருங்களென்பது நியாயமாகுமா தோட்டி என்பவனைவிட துன்பத்தைக் களைகிறவன் யார்? தோட்டி யென்னும் சொல்லைப் பொறுப்பவன் யார்? அடிமையைவிட உழைப்பாளி யார்? அதை நீக்கத்தானே சுயராஜ்யக் கட்சிக்காரர் நடிப்பது. கிருஸ்தவர்கள் நம்மை அஞ்ஞானி யென்கிறார்கள்; நம்மில் சிலரை நீ யாரப்பா வென்று கேட்டால் நான் அஞ்ஞானி என்கிறான்; அஞ்ஞானி என்பதில் அர்த்தம் தெரியாமல் எப்படி ஒத்துக்கொண்டானோ அதுபோலவே சூத்திரன் என்னும் இழிவான பதத்தை தென் தேசத்தானும் ஒத்துக்கொண்டான். மகம்மதியர்கள் நம்மை காபர் என்கிறார்கள். இந்தியாவை வளப்பத்தோடு முன்வைத்திருந்தவர்களே என்று அர்த்தமாகுமா? வெள்ளைக்காரர்கள் நம்மை கூலி என்கிறார்கள்; கூலிதான் துன்பத்தைக் களைந்து உலகத்தைக் காப்பாற்றுகிறார்கள் என்று திருப்தியடைகிறோம். இவைகளைப்போல் பிராமணன் நம்மை சூத்திரன் என்கிறான். சூத்திரன் என்பதின் காரியகாரண கேவலத்தை விவரத்தோடும் தைரியத்தோடும் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கரைப் போன்றவர்கள் சொன்னால் அதனை தாபிப்பதற்கு பணம் கூலி கொடுத்து சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் ஆளும் வைத்து எவ்வளவு பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களானாலும் தென்தேசத்தவர்களை முட்டாள்கள் என்னும் அர்த்தத்தோடு கூடின சூத்திரன் என்னும் பதம் அவன் தலையிலேயே இருக்கவேண்டுமென்று சர்வ பிரயத்தனமும் செய்துவருகிறார்கள் ஆதலால் இவ்விழி தன்மையை நிவர்த்தித்துக்கொள்ள வழி தேடுங்கள்.

---

### திரிசிரபுரத் தமிழ்ச்சங்கத் தலைவரும், சென்னை சட்ட சபை உறுப்பினராயிருந்தவருமான திருவாளர் தி. மு. நாராயணசாமி பிள்ளையவர்கள் எம். ஏ. பி. எல். சென்னை சட்ட சபை உறுப்பினராகவும், ஜில்லா போர்டு துணைத் தலைவராகவும், எதிர்ப்பின்றித் தேர்ந்தெடுக்கப் பெற்றமை குறித்து அவர்களுக்கு சங்கத்தார் கூறிய

## வாழ்த்துரை.

பூமகள் தனக்கு முகமெனப் பொலிய
இயற்கை வளமும் செயற்கை நலமும்
எழில்பெற வாய்த்துள இந்திய நாட்டில்
"வேலி ஆயிரம் விளையுட் டாக"ப்
புனிதமாக் காவிரி புரக்கும் அதனால்
புனல்நா டெனப்பெயர் பொருந்தப் பெற்ற
சோழநா டதனில் தொல்புக ழுடைய
சிரபுரம் மன்னித் தெய்வ மணங்கமழ்
அமிழ்தினும் இனிய தமிழ்மொழி பேணும்
திரிசிர புரத்தமிழ்ச் சங்கத் தலைவ!
தெய்வப் புலமைப் சேக்கிழார் உளப்பட
அமைச்சரும் அரசரும் ஆன்றபல் லறிஞரும்
தோன்றிய வேளாண் மரபிற் றோன்றிப்
"புகழொடு தோன்றுக" எனும்மொழி போற்றி
வருமால் கடியும் திருமால் பெயரைத்
தாங்கும் **நாராயணசாமி** நல் லேறே!
நீஇ, ஆங்கிலக் கல்வி மேம்பா டெய்திச்
சட்டம் பயின்று பட்டமும் பெற்றனை;
தாய்மொழி பேணும் தகைமைமன் குணர்ந்தே
பண்டை மொழிகளிற் பண்டைய தாகிய
தண்டமிழ் மொழியும் தகவுடன் போற்றுவை;
முன்னும் சட்ட சபைஉறுப் பினராய்,
பின்னர் **நாட்டாண்மைக் கழகத்துதவித்**
**தலைவராய் அடுத்த சட்ட சபையின்**
**உறுப்பினராய்** ஒரு எதிர்ப்பு மின்றி
வரப்பெற் றனைநீ திறம்விளக் கினையால்;
அன்பும் அமைதியும் ஆன்ற அறிவும்
ஒழுக்கமும் ஆயபல் லுயர்நலம் உடையை;
அன்ன மாட்சி அனையை யாதலின்,
நீண்ட ஆயுளும் நிறை உடல் நலமும்
பூண்டு தமிழ்நாடதற்கும் புனிதத்
தமிழ்மொழி தனக்கும் தகுதியில் நின்று
செய்பணி செய்து சிறக்க
வாழிய இறைவனை வழுத்துவம் யாமே.

---

### திருவண்ணாமலை தாலூகாவின் கிராம காங்கிரஸ் சபைகளுக்கு ஓர் வேண்டுகோள்.

இந்த தாலூகாவில் இரையூர், சோமாசிபாடி ஆகிய இரண்டு சபைகள் தவிர பாக்கியுள்ள சபைகள் இதுவரையில் தேர்தல் நடத்தியதாகத் தெரியவில்லை அசாம் காங்கிரஸ் சமீபித்துவிட்டதால் தேர்தலை 18-11-26-க்குள் நடத்தி உடனே தயவு செய்து தெரிவிக்க கோருகிறேன்.

நா. அண்ணாமலை பிள்ளை,
ஜில்லா காங்கிரஸ் காரியதரிசி,
திருவண்ணாமலை.

# தேர்தல் முடிவு.

இதுவரை

வெற்றியடைந்தவர்களின் விபரம்.

## இந்திய சட்ட சபைக்கு,

16 ஸ்தானங்களுக்கு இதுவரை 9 ஸ்தானங்களின் முடிவே வந்திருக்கிறது.

அதாவது.—

ஸ்ரீமான்கள்

ஆர். கே. ஷண்முகம் செட்டியார், சி. துரைசாமி ஐயங்கார், வையத் மூர்த்துசா சாஹிபு. எ. ரங்கசாமி ஐயங்கார், மக்பேல், கே. வி. ரங்கசாமி ஐயங்கார், கான்பஹதூர் ஹாஜி அப்துல்லா ஹாஜிகாசிம் வித்யாசாகர பாண்டியா. மஹமட் ஷமண்ட் சாஹிபு.

## சென்னை சட்ட சபைக்கு.

நிலச்சுவான்தாரர்கள்.

தொகுதி ஸ்தானம் 6-க்கு

பனகால் ராஜா, கொல்லப்பள்ளி ராஜா, காளிகோட்டை ராஜா, ராமநாதபுரம் ராஜா, டாக்டர் சுப்பாராயன், மூப்பில் நாயர்.

சர்வகலாசாலை தொகுதிக்கு.

எஸ். சத்யமூர்த்தி.

நாட்டுக்கோட்டை நகரத்தார் தொகுதிக்கு.

ஏ. எல். ஏ ஆர். நாராயண செட்டியார்.

தென்னிந்தியா வர்த்தக சங்கத்துக்கு.

சி. கோபால மேனன்

சென்னை ஐரோப்பிய வியாபார சங்கத்துக்கு.

சி. ஈ. வுட், கே. கே.

சென்னை வியாபார சங்கத்துக்கு.

ஜே. எம். ஸ்மித்.

தோட்டக்கார சங்கத்துக்கு.

சி. ஆர். டி. காங்க்ரீவ்

ஐரோப்பியர் தொகுதி.

அலெக்ஸாண்டர் மக்டோகல்.

ஆங்கிலோ இந்தியர் தொகுதி.

டேவிஸ்.

மஹமதியர் தொகுதி.

13 ஸ்தானங்களுக்கு 9 ஸ்தானங்களின் முடிவு வந்திருக்கிறது.

தஞ்சை டாக்டர் ராஜன்டீன், மதுரை திருச்சி நகரம், அப்பாஸ் அலி, மதுரை திருச்சி கிராமம் முகமத்மீரா, இராமநாதபுரம் திருநெல்வேலி, துபாஷ் காதர்சாஹிபு, மலையாளம் கே. உப்பிசாஹிபு, டி. எம். மொய்டு, தென்கன்னடம், முகமது ஷம்நாத், சென்னை அப்துல் அமீத்கான், செங்கற்பட்டு, வடஆற்காடு, கான்பகதூர் அப்துல் ரஜாக்.

கிருஸ்துவ தொகுதி.

5 ஸ்தானங்களுக்கு 2 ஸ்தானங்களின் முடிவு வந்திருக்கிறது.

தஞ்சை, திருச்சி, மதுரை, அற்புதசாமி உடையார்.

சேலம், கோயமுத்தூர், நீலகிரி, மலபார் சல்டானு.

நகரத்தொகுதி 9 ஸ்தானங்களுக்கு.

சென்னை நகர்.

டாக்டர் மல்லையா, சாமி. வெங்கடாசலம செட்டியார், சி. எஸ் கோவிந்தராஜ முதலியார். பக்தவத்ஸலு நாயுடு.

திருநெல்வேலி பாளையங்கோட்டை, சாவடி சுப்பிரமணிய பிள்ளை.

மதுரை, எல். கே. துளஸிராம்.

திருச்சி, யூ. ராமசாமி ஐயர்.

காக்கிநாடா, ராமசோமயாஜலு.

விசாகபட்டணம், பானேஜிராவ்.

அனந்தப்பூர்.

சி. நாராயண ரெட்டி, ஓ. பி. ரெட்டி.

கோதாவரி

டி. நாராயணராஜு, எம். நாராயணராவ்.

கடப்பை.

சே. கோட்டி ரெட்டி, எ. பரசுராம ராவ்

மதுரை

பி டி. ராஜன், கே. ஆர். வெங்கடராம ஐயர், சேத்தூர் ஜமீன்தார்.

ராமநாதபுரம்.

டி. சி. ஸ்ரீநிவாசய்யங்கார், ஏ. எம். முருகப்ப செட்டியார்.

தஞ்சை.

முத்தையா முதலியார், மருதவாணம பிள்ளை, சிவசுப்பிரமணிய ஐயர்.

வடஆற்காடு.

ஆதிநாராயண செட்டியார், வெங்கடரங்கம் நாயுடு, மாணிக்கவேல் நாயக்கர்

செங்கற்பட்டு.

கிருஷ்ணசாமி நாயக்கர், சி. முத்துரங்க முதலியார்.

திருச்சி.

நாராயணசாமிபிள்ளை, சேதுரத்தினம் ஐயர்.

கோயமுத்தூர்.

சி எஸ். இரத்தின சபாபதி முதலியார், பட்டக்காரர் வேணு உடையாக் கவுண்டர், சி. வி. வெங்கடரமண ஐயங்கார்.

நீலகிரி.

ஆரி கவுடர்.

குண்டூர்.

குப்புசாமி சௌத்ரி, ஆஞ்சநேயலு, எத்திராஜுலு நாயுடு.

திருநெல்வேலி.

திவான்பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார், சிதம்பரநாத முதலியார்.

கஞ்சம்.

எஸ். விஸ்வநாத தாஸ், காமேஸ்வர ராவ் நாயுடு, சர். ஏ. பி. பாத்ரோ.

சேலம்.

எல்லப்ப செட்டியார், சி. டி. அப்பாவு செட்டியார்.

---

## மந்திரிபாளையம், தாலூகா போர்டு பாடசாலை மறுப்புக்கு பதில்.

இவ்வூர் பாடசாலையைப்பற்றி மா. வே. கருப்பண்ண செட்டியார் எழுதிய வியாசத்தையும் அதற்கு மறுப்பு எழுதிய அ. முத்துசாமி செட்டியார், ஆர். எம். ராமலிங்கம் செட்டியார் இவர்களுடைய வியாசத்தையும் படித்துப்பார்த்தோம். மேற்படி இருவர்களில் ஆர். எம். ராமலிங்கம் செட்டியார் இவ்வூர் வாசியல்ல. அவர் இவ்வூரிலும் இல்லை. மேற்படி போர்டு பாடசாலையைப்பற்றி எங்களுக்குத் தெரிந்தவரையில் சுமார் 15 பிள்ளைகளுக்குக் குறைந்தேதான் படித்து வருகிறார்கள். தவிர இவ்வூரில் இன்னொரு பள்ளிக்கூடமும் ஏற்பட்டு, அந்தப் பள்ளிக்கூடத்தில் சுமார் 30 பிள்ளைகள், படித்துக் கொண்டு வருகிறார்கள். தாலூகா போர்டு பள்ளிக்கூடங்களில் மாதம் 1-க்கு 1, 2 அணா சம்பளம் கொடுத்து படிக்கவைக்கிறதை விட்டு மாதம் ஒன்றுக்கு ரூ 2 சம்பளம் கொடுத்து அடுத்த பள்ளிக்கூடத்தில் மற்ற பிள்ளைகளைப் படிக்கவைத்துக்கொண்டு இருப்பதைப் பார்த்தால் இந்த போர்டு பள்ளிக்கூடத்தில படிப்பு எவ்வளவுதூரம் பிள்ளைகளுக்கு அனுகூலமாக போதிக்கப்படுகிறது என்கிற விஷயம் தெரிந்துகொள்ளலாம். மேலும், இந்தப் பள்ளிக்கூட வாத்தியார் பிராமணராய் இருப்பதால்: பஞ்சமச்சிறுவர்களைச் சேர்த்துக்கொள்ள மறுத்து வருகிறார். இதனால் பஞ்சமச் சிறுவர்கள் படிப்பதற்கு வசதியில்லாமல் போய் விட்டது. இவர் பிராஞ்சு போஸ்டுமாஸ்டராயும் காப்பிக்கடை வியாபாரியாயும் இருப்பதால்தான் இவ்வளவு இடஞ்சல்கள் ஏற்பட்டு வருகின்றன. ஆகையால் தாலூகா போர்டு பிரசிடெண்டு அவர்கள் கவனித்து மேற்படி உபாத்தியாயரை நீக்கி ஒரு பிராமணரல்லாத உபாத்தியாயரை நியமித்து இந்தப்பள்ளிக்கூடத்தை விருத்திக்கு கொண்டுவரவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஸ்ரீமான் மா. வே. கருப்பண்ண செட்டியார் எழுதிய விஷயத்தை நிரூபிக்க பல விஷயங்கள் இருக்கின்றன. அதை அவரும் நிரூபிக்க தயாராய் இருக்கிறார் என்பதையும், தெரிவித்துக்கொள்ளுகிறோம்

மந்திரிபாளையம், சிவன்மலைக் கவுண்டன். ப பெரியசாமிக்கவுண்டன். சுப்பராயசெட்டி. கோங்கஞ்செட்டி.

## ரூலூர் சப்ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ். ஜனங்களின் பரிதாப நிலை.

இப்போது இவ்விடம் இருக்கும் சப் ரிஜிஸ்ட்ரார் அநேக பத்திரங்களை ரிஜிஸ்டர் செய்யாமல் வாய்சு செய்வதால் ஜனங்கள் படும்பாடு சொல்லத்தரமல்ல. 100ரூபாய்க்கு அடமானம் செய்யக் காகிதம் 12 அணா, பீஸ் 1 ரூபாய் எழுத்துக்கூலி இது தவிர வேலை மெனக்கேடு; ஜனங்கள் தங்கள் கிராமத்தைவிட்டு ரூலூர் வருவதால் எவ்வளவோ நஷ்டம். இப்படியிருக்க ஒரு பத்திரத்துக்கு இரண்டு நாள் மூன்று தடவை வந்தும் ரிஜிஸ்டராகாமல் இரண்டு உள்ளூர் சாக்ஷிகளோடு வந்துபோனால் எவ்வளவு கஷ்டமாயிருக்கும் என்பதை மேலதிகாரிகள் கவனிப்பார்களாக. இதற்கு காரணம் இந்த நஷ்டங்களோடு அந்த ஆபீசில் குமாஸ்தாக்களாக இருப்பவர்களில் சிலர்களின் தயவு சம்பாதிக்க வேண்டும். இந்த குமாஸ்தாக்கள் உத்திரவு கொடுத்தால்தான் ரிஜிஸ்டர் செய்வது வழக்கமாயிருக்கிறது. ஆகையால் மேலதிகாரிகள் கொஞ்சம் கவலை எடுத்து தக்க ஏற்பாடுகள் செய்து தூரத்திலிருந்து வரும் ஏழை ஜனங்களின் கஷ்டத்தை நிவர்த்திக்கும்படி பிரார்த்திக்கிறேன் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

## கோயமுத்தூரில் ஸ்ரீமான ஈ. வெ. ராமசாமி நாயக்கரின்

# சொற்பொழிவு.


கோயமுத்தூரில் இம்மாதம் பத்தாம் தேதி கோயமுத்தூர் டவுன் ஹாலில் ஸ்ரீமான் வெரிவாட செட்டியார் தலைமையில் பனகால் அரசர் வெற்றிக்காக கூட்டிய வெற்றிக் கொண்டாட்டத்திற்கு கோவை நகரிலும் மற்றும் பல வெளியிடங்களிலுமிருந்து ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். அதுசமயம் அக்கிராசனர் அவர்கள் ஸ்ரீமான் ஈ. வெ. நாயக்கரைப் பேசும்படி கட்டளையிட்டதற்கிணங்க அவர் பேசியதின் சுருக்கமாவது.—

கனவான்களே.

பார்ப்பன ரல்லாதார் கட்சித் தலைவரான கனம் பனகால் அரசரின் வெற்றிக்காக இக்கூட்டம் கூட்டி நாம் கொண்டாட வேண்டுமென்பது அவ்வளவு அவசியமானதல்ல என்பது எனது அபிப்பிராயம். ஆனால் நமது முன்னேற்றத்திற்கு எதிரிகளாயுள்ளவர்கள் நமது பனகால் அரசர் வெற்றிக்குத் தடையாக செய்த சூழ்ச்சிகளும் முயற்சிகளும் அக்கிரமமான செய்கைகளும் பொது மக்களின் உணர்ச்சியை பலமாக கிளப்பி விட்டுவிட்டது. அது மாத்திரம் அல்லாமல் "பனகால் வீழ்ந்தார். பார்ப்பன ரல்லாதார் கட்சிக்கு சாவு மணி," என்பதாகவும், மற்றும் மேடைகளில் பேசும் சோமாரிகள் "பனகாலை வெட்டிப் புதைத்தாகிவிட்ட தென்றும் கொள்ளி வைத்தாய் விட்ட" தென்றும் பலமாதிரி லுச்சத்தனமாக பேசி வந்ததாலும் சுயராஜ்ஜியக் கட்சி தலைவர்கள் என்று சொல்லுபவர்களில் சிலரும் அவரைப் பற்றி மிகுதியும் ஈனத்தனமாய் பேசி வந்ததாலும் பார்ப்பனரல்லாத பெருவாரி மக்களுக்கு பனகால் அரசரிடம் ஒருவித அன்பு ஏற்பட இடம்கொடுத்தது. அதற்காக கொண்டாட வேண்டியதாயிற்று. உதாரணமாக நானும் ஸ்ரீமான் எஸ். ராமநாதன் அவர்களும் மதுரை பிளாட் பாரத்தில் ரயில் வண்டியிலிருந்தபடியே சில கனவான்களோடு பேசிக் கொண்டிருக்கையில் எங்கள் அறைக்குஅடுத்தஅறையிலிருந்த ஒரு பார்ப்பனத் "தலைவர்" மற்றொரு 'தலைவரோடு' பேசிக்கொண்டிருக்கையில் பனகால் அவனொரு முட்டாள் அயோக்கியன் அவனை அடக்க நீரேதக்கவர் அவன் ஒழிந்தான் அந்தஸ்தானத்திற்கு நீங்கள்தான் தகுந்தவர் என்று இம்மாதிரியாக இன்னும் அநேக அல்ப வார்த்தைகளால் குடிகாரர் வெறிகாரர்கள் பேசுவதுபோல் பேசினார். அந்த மதுரைத் "தலைவருக்கு" இது பிடிக்காமல் தனது அருவருப்பைக்கூட காட்டினார். இன்னும் எத்தனையோ இதுபோல் நடந்தன. இவ்வளவு பெயர்களால் வசவு கேட்டவரும் ஒழிந்து போனார் செத்துப்போனார் குழியில் புதைக்கப்பட்டுப் போனார்" என்று சொல்லப்பட்டவருமான ஒருவர் "உயிரோடிருக்கிறார் பிழைத்துவிட்டார்" என்கிற செய்தியைக் கேட்டால் சந்தோஷப்படாமல் இருக்க முடியுமா? இது ஒருபுறமிருந்தாலும் தேர்தல் விஷயத்திலும் நமது சுயமரியாதைக்கு எதிரிகளான பார்ப்பனர் பனகாலை தோற்கடித்துவிட்டால் தங்கள் ஆதிக்கம் நிரந்தரமாய் நிலை நிறுத்தப்பட்டுவிடும் என்கிற அபிப்பிராயத்தின் பேரில் பனகாலை வெற்றி பெறாமல் செய்வதற்கு பட்ட பாடுகள் கணக்கு வழக்கில்லை என்பதும் உங்கள் எல்லோருக்கும் தெரியும். ஐகோர்ட் ஜட்ஜிகள் ஜில்லா ஜட்ஜிகள் சப் ஜட்ஜிகள் ஜில்லாக் கலெக்டர் அரசாங்க நிருவாக சபை மெம்பர்கள் ஆகிய பெரிய உத்தியோகமுள்ள கூட்டங்களில் பலரும், போலீசு நிர்வாக உத்தியோக கூட்டங்களில் பலரும், பெருத்த லேவாதேவிக் கூட்டங்களில் பலரும் ஒன்று சேர்ந்து ஜமீன்தார்களின் ஓட்டுகளை ஸ்ரீமான் அல்லாடி அய்யருக்கு வாங்கிக் கொடுப்பதற்காக பட்டபாடுகள் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாதென்று கேள்விப்பட்டேன். இன்னும் எத்தனை ஜமீன்தார்களின் விவகாரத்தைக் காட்டி மிரட்டியும், ஆசை வார்த்தை சொல்லியும், எத்தனை ஜமீன்தாரர்கள் கடனைக் காட்டி மிரட்டியும், ஆசை வார்த்தை சொல்லியும், கொடுமை செய்தும் ஓட்டுகள் வாங்கப் பிரயத்தனப் பட்டதையும் கேள்விப்பட்டேன். இவைகள் பொய்யானாலும் சரி மெய்யானாலும் சரி இவ்வளவுக்கும் தப்பி வெற்றி பெற்றுவிட்டார் என்றால் கேட்போருக்கு கொண்டாட்டம் ஏற்படுமா? ஏற்படாதா? இவ்வளவுதான் கொண்டாட்டத்திற்கு காரணமே அல்லாமல் பனகால் சட்ட சபை மூலம் நமக்கு வேண்டியதை எல்லாம் சாதித்து விடுவார் என்று எனக்கு எள்ளளவும் நம்பிக்கை கிடையாது இவர்கள்போன்றவர்கள் தோல்வியுற்றால்தான் பார்ப்பனரல்லாதார்கள் விழிப்பார்கள் சட்ட சபையைப்பற்றி எனது அபிப்பிராயம் தங்களுக்குத் தெரியும். சட்ட சபையில் ஆகிற காரியம் ஒரு புறமிருந்தாலும் சட்ட சபை தேர்தல் முறையே நம்ம நாட்டுக்கு கேடானது என்பது எனது பலமான அபிப்பிராயம், இம்மாதிரி தேர்தல் மூலம் பிரதிநிதித்வம் அளிப்பது என்பது கலால் இலாகா மூலம் குடியை ஒழிப்பது என்பது போல்தான் ஏற்படும். இத்தேர்தல் முறை நமது நாட்டுக்கு வருமுன் மக்களிடை இவ்வளவு ஒழுக்க ஈனமும் கண்ணியக் குறைவும் இல்லவே இல்லை.

உதாரணமாக இந்த சட்ட சபை பிரதிநிதித்துவம் சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்னால் இருந்தமாதிரியானது இப்போது இருந்ததைப் போலல்லாமல் எவ்வளவு கண்ணியமானதாயிருந்தது. அதாவது சென்னைமாகாணத்திற்கு மூன்றே சட்ட சபை மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். அவர்களும கூடிய வரையில் ஸ்ரீமான்கள் சேலம் சி. விஜயராகவாச்சாரியார் ரத்தின சபாபதி முதலியார் ஜம்புலிங்க முதலியார் போன்ற கூடுமானவரை கண்ணியமுள்ளவர்களாயிருந்தார்கள். இவர்களைத் தெரிந்தெடுக்கும் வோட்டர்கள் தொகையோ எல்லாம் சேர்ந்து மாகாணத்திற்கே சுமார் 100 பேர்கள்தான் இருப்பார்கள். அதாவது ஒவ்வொரு முனிசிபல் சபைக்கு ஒரு ஓட்டு வீதம் ஜனப்பிரதிநிதி சபைகளுக்கு ஓட்டு இருந்து வந்தது. இதனால் பணம் கொடுத்து ஓட்டுவாங்கவும் பணம் வாங்கி ஓட்டு கொடுக்கவும் வழி இல்லாமல் இருந்தது. அதற்கு பிறகு 1910 ல் ஏற்பட்ட சீர்திருத்தல் 8 ஜில்லாவுக்கு ஒரு மெம்பர் என்பதுமாறி 3 ஜில்லாவுக்கு ஒரு மெம்பர் வீதமும் 8 ஜில்லாவுக்கு முப்பது நாற்பது ஓட்டர்கள் என்பதுமாறிமூன்றுஜில்லாவுக்கு 300ஓட்டர்கள் வீதமும் ஏற்பட்டது. அந்த ஓட்டர்கள் குறைந்த அளவு ஞானமுள்ளவர்களாகவாவது இருந்தார்கள். எப்படியென்றால் தாலூகா போர்டு மெம்பர் முனிசிபல் கவுன்சிலர் ஜில்லா போர்டு மெம்பர் என்கிற ஏதாவது ஒரு யோக்கியதாம்சமுடையவர்களாகவே இருந்தார்கள். இந்த தொகுதியிலும் ஓட்டர்களை ஏமாற்ற முடியாமலும் கணக்கு பிள்ளை, மணியகார் வாத்தியார், பிரசாரகர் முதலிய தாரகர்களுக்கு பணம் கொடுத்து ஓட்டு சேகரிக்க முடியாமலும் கூடியவரை வெகு சிலரே பணத்திற்கு ஆசைப்படத்தக்கதாகவும் வெகு சிலரே கொடுக்கத்தக்கதாகவும் இருந்துவந்தது. இப்போது 1920 வருஷத்திய சீர்திருத்தத்தில் 3 ஜில்லாவுக்கு ஒருவர் மெம்பர் இருந்தது போய் ஒரு ஜில்லாவுக்கு மூன்று மெம்பர் வீதமும், மூன்று ஜில்லாவுக்கு முன்னூறு ஓட்டர்கள் இருந்தது மாறி ஒரு ஜில்லாவுக்கு எழுபது ஆயிரம் ஓட்டர்கள் வீதமும் ஏற்பட்டதின் பலனாய் ஏய்க்க சக்தி படைத்தவனும் பணம் செலவு செய்ய சக்தி படைத்தவனும் சட்ட சபைக்கு பிரதிநிதியாகத்தக்க யோக்கியதையாய் முடிந்து விட்டது. 2 அணு கொடுத்தால் தங்கள் ஓட்டுகளை யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கத்தக்கவர்களாகவும் ஒரு குடம் கள்ளுக்கு 30 அல்லது 40 ஓட்டுகள் கிடைக்கும்படியாகவும் ஓட்டர் நிலைமை ஏற்பட்டுப்போய்விட்டது. இப்படி நான் சொல்லுவதால் 30 வருஷத்திற்கு முன் சட்ட சபை மூலம் நமக்கு கிடைத்துவந்த நன்மை இப்போது போய் விட்டது என்று சொல்ல வரவில்லை அதுவும் உபயோகமில்லாதது. ஆனாலும் சட்டசபை தேர்தல் முறையில் அபேக்ஷகர்கள் யோக்கியதையும் ஓட்டர்கள் யோக்கியதையும் மிகுதியும் கேவலப்பட்டுவிட்டதோடு தேசத்தில் மக்களிடை அயோக்கியத்தனமும் நாணயக் குறைவும் பரவுவதற்கு இம்முறைகள் அதிக ஆஸ்பதமாயிருக்கிறதென்றே சொல்லுகிறேன். இனியும், காங்கிரசோ சுயராஜ்யக் கட்சியோ வாங்கிக் கொடுக்கப்போகும் அடுத்த சீர்திருத்தத்தில் மனிதப் பிறவியாய் பிறந்து 20 வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் சகலருக்கும் ஓட்டுரிமையும் அபேட்சக உரிமையும் வழங்குவது என்று வந்துவிட்டால் தேசத்தில் எவ்வளவு புரட்டு பித்தலாட்டம் சூழ்ச்சி அயோக்கியத்தனம் நாணயக்குறைவு முதலிய ஒழுக்க ஈனங்கள் ஏற்படும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். நான் இப்படிச் சொல்வதால் மக்களுக்கு சுதந்திரம் வேண்டாமென்று சொல்வதாக யாரும் நினைக்கக்கூடாது. மக்களை கண்ணியக் குறைவிலும் ஒழுக்க ஈனத்திலும் கொண்டுவந்துவிடும் சுதந்திரங்கள் வளர்ந்துகொண்டே போனால் மக்கள்

(இதன் தொடர்ச்சி 10 ம் பக்கம் பார்க்க)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறென்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே


# குடி அரசு.

அக்ஷய-ஹு ஐப்பசி-மீ 29-உ.


## தக்க சமயம்.

### சட்ட சபைத் தேர்தல் முடிவு ஒன்றும் முழுகிப்போய்விடவில்லை.

சட்ட சபைத் தேர்தல்களின் முடிவானது தமிழ் நாட்டில் நாம் எதிர்பார்த்ததற்குச் சிறிது மாருய் ஏற்பட்டு இருக்கிறது. ஆனபோதிலும் இதில் ஒன்றும் ஆச்சாரியப்படத்தக்கதில்லை. பாமர மக்களுக்குப்போதுமான அறிவு உண்டாகும்படி செய்வதற்கு முந்தி அவர்கள் வசம் ஓட்டு என்னும் ஆயுதத்தைக் கொடுத்த பிறகு அது அவர்களையே கெடுத்துக்கொள்ள உபயோகப் படுத்தப்பட்டால் அதற்காக யாரும் ஓட்டர்களை குற்றம் சொல்ல முடியாது. எனினும் இதுவரை வெளிவந்திருக்கும் தேர்தல் முடிவுகளின்படி பார்ப்பனரல்லாதார் பயப்படத்தக்க மாதிரி ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை. பொதுவாக நாம் சட்டசபை மூலம் அரசியல் சம்பந்தமாக ஒரு காரியத்தையும் செய்து கொள்ள முடியாது என்று அநேக தடவைகளில் எழுதியும் பேசியும் வந்திருப்பது வாசகர்களுக்குநன்ருய்த்தெரியும். பார்ப்பனரல்லாதார் சமூக சம்பந்தமாக பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கு பார்ப்பனரல்லாதார் செய்யும் முயற்சிக்குப் பார்ப்பனர்கள் சட்ட சபையின் மூலம் இடையூறு உண்டாக்காமல் இருக்கச் செய்யலாம் என்கிற ஒரே எண்ணத்துடன் மாத்திரம் சட்ட சபையில் நம்பிக்கையுள்ளவர்களை இன்ன கொள்கைக்காரர்களுக்கு ஓட்டு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டோமே தவிர சுயராஜ்ஜியமோ சுயமரியாதையோ சட்ட சபையில் கிடைத்து விடும் என்பதற்கல்ல. எந்த விதத்திலும் சென்ற தேர்தல் முடிவை விட இத்தேர்தல் முடிவு அதிகமான பார்ப்பனர்களை சட்ட சபைக்குத் தெரிந்தெடுத்தனுப்பி விடவில்லை. இரண்டாவது பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை விஷயத்திலாவது வகுப்புவாரி உரிமை பெற விஷயத்திலாவது அதிகமான எதிரிகள் சட்ட சபைக்கு தெரிந்தெடுக்கப்பட்டுவிட்டார்கள் என்றும் சொல்லி விடுவதற்குமில்லை. உத்தியோக ஆசையின் காரணமாகவும் சுய நலத்தின் மூலமாகவும் பலபார்ப்பனரல்லாதார் தாங்கள் தெரிந்தெடுக்கப்படுவதற்கு பார்ப்பனர்களின் உதவியை நாடியே தீரவேண்டியதாயிற்று. ஏனெனில் ஓட்டர்களோ பாமர ஜனங்கள்; மொத்தத்தில் 100-க்கு 75 பேருக்கு மேலாகவே ஓட்டுரிமை இன்னதென்றறியாத அப்பாவிகள். அதில் பலர் ஓட்டுகளை சுய நலத்திற்கும் பண விலைக்கும் விற்க வேண்டிய அவசியமுடையவர்கள். இவைஇரண்டுமல்லாமலும், எப்படி நமது மக்களில் 100-க்கு 90 பேருக்கு மேல் மோக்ஷம் புண்ணியம் தருமம் என்று 1000 கணக்கான வருஷங்களாக வைதிகத்தில் பார்ப்பனர்களுக்கு அடிமையாகி அறிவிலிகளாய் மூட நம்பிக்கையில் கட்டுண்டு இருக்கின்ருர்களோ அதுபோல் காங்கிரஸ் சுயராஜ்யம் வரி குறைவு அரிசி ரூபாயுக்கு 8 படி என்கிற லௌகிக அறிவீனத்திலும் பேராசையிலும் சுமார் 40 வருஷகாலமாய் முழுகி இருக்கிறவர்கள். அதுமாத்திரமல்லாமல் மேல்படி வைதிகத்தின் பேரால் பார்ப்பனர் தங்கள் வயிறு வளர்க்க ஏற்படுத்தப்பட்ட வேதம் சாஸ்திரம் புராணம் என்பவைகளை தங்களுக்கே பொய் புரட்டு என்று தெரிந்திருந்தாலும் அவைகளைப் பாடம் பண்ணிக்கொண்டும் வைதிக வேஷம் போட்டுக் கொண்டும் பாஷாண்டிகளாய் புராணப் பிரசங்கம் செய்து கொண்டும்பார்ப்பனஆதிக்கத்திற்குஇடங்கொடுத்து வயிறு வளர்த்துக் கீர்த்தி சம்பாதித்துக் கொண்டு சில பார்ப்பனரல்லாதார்கள் திரிவது போலவே இந்த லௌகிகத்திலும் காங்கிரஸ் சுயராஜ்யம் உரிமை தேசம் தேசியம் சர்க்காரை எதிர்த்தல் அரசாங்கத்தைத் தகர்த்தல் முட்டுக்கட்டை ஆகிய சொற்களைச் சொல்லிக்கொண்டு சாண்வயிறுவளர்க்கவும் பொய்ப் புகழ் சம்பாதிக்கவும் திரியும் ஒரு போலி அரசியல் பாஷாண்டிக் கூட்டாத்தார் பார்ப்பனரல்லாதரிலேயே உண்டு. பெரும்பாலும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் கேட்டை வளர்க்கும் பார்ப்பனியத்திற்கும் பார்ப்பன ஆதிக்கத்திற்கும் ஆதிமுதல் இன்றுவரை உதவி செய்து வந்து நமது சுயமரியாதையை ஒழித்தவர்கள் இப்பாஷாண்டிக் கூட்டத்தாரே யாவர். ஒரு காலத்தில் மகாத்மா ஒத்துழையாமையைக்குலைத்தது சுயராஜ்யக்கட்சிஅல்ல, ஒத்துழையாமையில் ஒருகாலும் சுயராஜ்யக் கட்சியில் ஒருகாலும வைத்துக் கொண்டு "ஒத்துழையாமைதான் தேசத்திற்கு விடுதலை அளிக்கவல்லது சுயராஜ்யக் கட்சிதான் தீவிரமான தேசிய கொள்கை உடையது" என்று சொல்லிக்கொண்டு இருதலைப் பாம்புகளாய் வாழ்வை நடத்திய வௌவால் கட்சியார்களால்தான் ஒத்துழையாமை ஒழிந்தது என்று சொன்னதுபோல் இப்போதும் பார்ப்பனரல்லாதார் சமூக சுதந்திரத்திற்கும் சுயமரியாதைக்கும் இந்தப்பாஷாண்டிகளே காரணமாயிருக்கிருர்கள் என்று சொல்வது மிகையாகாது. இவ்வித பல நிலைமைகள் பார்ப்பனர்களுக்கு அநுகூலமாய் இருப்பதோடு இவைகள் அனைத்தையும் தாங்கள் ஒழுங்காய் உபயோகப்படுத்திக் கொள்ள சகலவசதியும் உடைத்தாயிருக்கிருர்கள். முதலாவது அவர்கள் பிறரை ஏமாற்றியே பிழைக்க வேண்டிய யோக்கியதையில்பாரம்பரியமாய் தலைமுறைதலைமுறையாய்இருந்து வருவதால் ஏமாற்றத்தக்க வழிகள் இன்னதென்றும் அதற்கேற்ற சாதனங்கள் இன்னதென்றும் அறிந்திருப்பதோடு இத்தொழிலில் கைதேர்ந்த அநுபவமும் ஆற்றலுமுடையவர்களாகவும் நம்மில் பலபாஷாண்டிகளை எப்படி தங்கள் வசமாக்கி நம்மை ஏமாற்றச்செய்யலாம் என்கிறவகை தெரிந்தவர்களாகவும் இருக்கிருர்கள். அதற்கேற்றாப்போல் நமக்கு ஏற்பட்ட அரசாங்க வர்க்கத்தாரும் அவர்களைப் போலவே மக்கள் அறிவீனத்தினலேயே பிழைக்கத் தக்கவர்க்கமாக அமைந்து அறிவீனத்தை வளர்த்துக் கொண்டே வந்திருக்கிருர்கள். வியாஜ்ஜியக்காரர்களைஏமாற்றஎப்படி வக்கீலும் அவர்களது(டவுட்டுகள்) புரோக்கர்களும் ஒன்று சேருகிருர்களோ வாலிபர்களை ஏமாற்ற எப்படி வேசிகளும் அவர்களது தரகர்களும் ஒன்று சேருகிருர்களோ அதுபோலவே நமது மக்களை ஏமாற்ற அரசாங்க வர்க்கத்தாரும் பார்ப்பனர்களும் ஒன்று சேர்ந்து நமது பாஷாண்டிகளது உதவியால் நமது அறிவீனத்தை வளர்க்க வேண்டியதாயிற்று ஆனபோதிலும் நமது நிலை முன் தேர்தல் காலத்தில் இருந்ததைவிட இந்த தேர்தலின் பயனுல் ஒன்றும் பிற்போக்கடைந்து விடவில்லை. முன் தேர்தலைவிட இப்போது சில ஸ்தானங்கள் நமது கொள்கையில் லக்ஷியமில்லாதார் வசம் போய்விட்டது என்று சொல்வதானுல் அதுவெறும் மாய்கைதானே ஒழிய அதனுல் நமது முற்போக்குக்கு ஒன்றும் அதிகமான கெடுதி ஏற்பட்டுவிடாது. நல்ல அறிவோடு யோசித்துப் பார்த்தால் நமது முற்போக்குக்கு நன்மை என்றே சொல்லலாம். அதாவது இத்தேர்தல் முடிவு மூலம் நமக்கு உள்ள குறை என்ன என்பதை உணரவும், அதை திருத்த ஊக்கத்தோடு முயலவும் இத்தேர்தல்முடிவுதூண்ட ஏற்பட்டது. உத்தியோகம் பெறுவது மாத்திரம்தான் பார்ப்பனரல்லாதார் கட்சியின் கொள்கை என்பது வாஸ்தவமானுல் மாத்திரம் இத்தேர்தலால் பார்ப்பனரல்லாதாருக்கு தோல்வி என்று சொல்லலாம். பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கும் முற்போக்குக்கும் இக்கட்சி ஏற்பட்டது என்று சொல்வதானுல் தேர்தல் முடிவு பார்ப்பனரல்லாதாருக்கு அநுகூலம் என்றே சொல்லுவோம். இது தேர்தல் முடிவைப் பார்த்த பிறகு சீ! புளிக்கும் என்று சொல்வதல்ல. தேர்தல் முடிவுக்கு முன்பே இதை நினைத்தோம். உதாரணமாக சென்ற மாதக் கடைசியில் சேரமாதேவியில் ஸ்ரீமான்கள் ஜோசப் எஸ். ராமநாதன், ராய. சொக்கலிங்கம், காசிவிஸ்வநாதம், பிச்சயப்பாசுப்பிரமணியம் முதலிய பல முக்கியஸ்தர்கள் கூடி பார்ப்பனரல்லாதார், சுயமரியாதையைப்பற்றியும் முற்போக்கைப்பற்றியும் பேசி அதற்காக என்ன செய்வது என்பதைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்த சமயத்தில் நமது சமூகத்திற்கு முற்போக்கேற்பட [illegible] வேண்டுமானுல் வரப்போகும் தேர்தலில் பனகால் அரசரும் ராமசாமி முதலியாரும்

## கக்ஷிப் புரட்டு:
### பார்ப்பனப் பத்திரிகைகளின் கண்கட்டு ஜால வித்தை.

சென்னை சட்ட சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அங்கத்தினர்களைப்பற்றி கக்ஷி பிரித்தெழுதுவதன்மூலம் பார்ப்பனக் கட்சிக்கு அதிகமான ஆள்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாய் பொதுஜனங்களையும், சர்க்காரையும் ஏமாற்றுவதற்காக 'சுதேசமித்திரன்', 'இந்து', 'சுயராஜ்யா', முதலிய பார்ப்பனப் பத்திரிகைகள் செய்து வரும் கண்கட்டு ஜால வித்தைகள் கணக்கு வழக்கு இல்லை. இதுகளை நம்பி ஏதோ சில பாமர ஜனங்கள் ஏமாந்து போகக்கூடுமே தவிர யாரை ஏமாற்றுவதற்காக இப்பார்ப்பனப் பத்திரிகைகள் இஜ் ஜாலவித்தைகள் செய்கின்றனவோ, அவர்கள் அதாவது சர்க்காரும் பார்ப்பனரல்லாத சட்ட சபை அங்கத்தினர்களும் ஒருக்காலமும் ஏமாறப் போவதில்லை என்பது உறுதி. முதலாவதாக ஒரு விஷயத்தை சந்தோஷத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம். அதாவது நமது நாட்டுப் பார்ப்பனர் தங்களைத்தவிரவும் தங்களது அடிமைகளைத் தவிரவும் வேறு ஒருவரையும் கிட்டத்தில் அணுகவொட்டாத மாதிரியில் சுயராஜ்யக் கட்சி என்பதாக ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு அனேக பார்ப்பனரல்லாத அரசியல்பாஷாண்டிகளின் ஆதரவையும் விலை கொடுத்து வாங்கி, அதனாலேயே பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்திவிடலாம் என்பதாகக் கருதி பொய் அமக்களம் செய்து வந்த சுயராஜ்யக் கட்சி என்கிற விஷக்காற்று இந்த தேர்தலில் தலைகாட்டாமல் ஒழிந்துபோய் விட்டது என்பதும் அதை நமது பார்ப்பனர்களே வாயினால் சொல்லிக்கொள்ளக்கூட வெட்கப்படும் படி ஆய்விட்டதென்பதும் உறுதியாகிவிட்டது. எப்படியெனில் மற்ற மாகாணங்களைப்பற்றி தேர்தல் விஷயங்களை எழுதுகிறபோது மாத்திரம் சுயராஜ்யக் கட்சி சுயேச்சைக் கட்சி என்று எழுதுகிறார்களே தவிர நமது மாகாணத்தைப் பற்றி எழு[illegible] சுயராஜ்யக் கட்சி என்பதை விட்டுவிட்டு காங்கிரஸ் கட்சி, சுயேச்சைக் கட்சி ஜஸ்டிஸ் கட்சி, என்று எழுதுகிறார்கள். தேர்தல் ஆரம்ப காலத்தில் அபேட்சகர்களை பொருக்கி எடுத்த காலத்தில் காங்கிரஸ் கட்சியாகநிறுத்தப்பட்ட அபேட்சகர்கள் எத்தனைபேர்? அவர்களில் காங்கிரஸ் கொள்கைப்படி நிபந்தனைகளில் கையெழுத்து போட்டு காங்கிரஸ் நிபந்தனைப்படி ஆயிரம் ஆயிரம் ரூபாய் வீதம் டிபாசிட் கட்டி நின்றவர்கள் எத்தனைபேர்? இவர்களில் ஜயித்தவர்கள் எத்தனை பேர்? தோற்றவர்கள் எத்தனை பேர் என்று கணக்குப்பார்த்தால் தெரியவரும். இவர்களில்பார்ப்பனகாங்கரசு தீர்மானப்படிஉத்தியோகம்கிடைத்தால்ஒப்புக்கொள்ள சம்மதமில்லாதவர்கள் எத்தனைபேர்; சட்ட சபையில் ஒத்துழையாமை செய்யப்போயிருப்பவர்கள் எத்தனை பேர்; மகாத்மா சொல்வதுபோல் காங்கிரஸ காரர்கள் எத்தனை பேர்; 4 அணு சந்தா பணம் கொடுத்து காங்கிரஸ மெம்பர்கள் ஆனவர்கள் எத்தனை பேர்; என்று கணக்கு பார்த்தால் இக் கட்சி ஜாலத்தின் ரகசியம் தெரியும். தாங்கள் இதுவரை தெரிந்தெடுக்கப்பட்டதாய் எழுதிக்கொள்ளும் பெயர்களையே 'இந்து': ஒருவிதமாகவும், 'சுதேசமித்திரன்' ஒருவிதமாகவும், 'சுயராஜ்யா' ஒரு விதமாகவும் கட்சிப்பெயர்கள் எழுதிவருகின்றன. 'சுதேசமித்திரனே', ஒருவருக்கே ஒருநாளைக்கு ஒரு கட்சிப்பெயரும், மற்றொரு நாளைக்கு மற்றொரு கட்சிப்பெயரும் கொடுக்கிறது. ஸ்ரீமான் பானேஜி ராவ் என்பவரைப்பற்றியும் இன்னும் சிலரைப்பற்றியும் மாறிமாறி எழுதிவருகிறது. இது இப்படி இருந்தாலும் காங்கிரஸ கட்சி என்கிற தலைப்பில் மித்திரனும், இந்துவும், சுயராஜ்யாவும் பிரசுரித்திருக்கும் நபர்கள் சர்க்காரிடம் அபேட்சக நியமனச் சீட்டுகள் கொடுக்கும்போது அவர்கள் கலெக்டரிடம் சொன்ன கட்சி எது என்று பார்க்கால் இவற்றுள் 4-ல் ஒரு பங்காவது சுயராஜ்யக் கட்சியாயிருக்குமா அல்லது காங்கிரஸ நிபந்தனைப்படி கையெழுத்திட்டு பணம் கட்டியவர்களாயிருக்குமா? என்பது தெரியும்.

அல்லாமலும் காங்கிரஸ கட்சிக்கு 34 பேர்கள் என்று போட்டுக்கொண்டதில் இவ்வளவு புரட்டு இருந்தாலும் காங்கிரஸ் கட்சிக்கு கொள்கை என்ன? அவர்கள் சட்ட சபையில் செய்ய உத்தேசித்திருக்கும் வேலைஎன்ன? என்பது யாருக்காவது தெரியுமா அல்லது "காங்கிரஸ" கட்சி மெம்பர்களுக்காவது தெரியுமா?

குரங்காட்டி குரங்குகளை ஆட்டுவது போல் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரான குரங்காட்டி உத்தியோகம் சம்பாதித்துக் கொடுப்பேன் என்கிற தடியை கையில் வைத்துக்கொண்டு "காங்கிரஸ கட்சி" சட்ட சபை மெம்பர்களான குரங்குகளை தன்னிஷ்டப்படி உட்கார், எழுந்திரு, சட்ட சபையை விட்டு வெளியில்வா உள்ளேபோ என்பதான கரணங்களைப் போடச் சொல்வதல்லாமல் வேறு என்ன காரியம் காங்கிரஸ் திட்டமாக நடத்தப்பட்டது. இது தவிர சுயேச்சை வாதிகள் என்பதற்காவது பொருள் என்ன? பார்ப்பனர் கட்சி மூலம் உத்தியோகம் கிடைப்பதானால் அவர்களோடு சேர்ந்து கை தூக்கவும் பார்ப்பனரல்லாதார் கட்சி மூலம் உத்தியோகம் கிடைப்பதானால் அவர்களோடு சேர்ந்து கை தூக்கவும் அல்லாது அவர்களுக்கு ஏதாவது கொள்கை உண்டா? இது தவிர ஜஸ்டிஸ் கட்சிக்கு குறைந்த எண்ணிக்கை போட்டிருப்பதால் அக் கட்சிக்கு என்ன நஷ்டம். ஜஸ்டிஸ் கட்சி அல்லாதாரெல்லாம் அக்கட்சி கொள்கைக்கு விரோதம் என்று அருத்தமா? ஜஸ்டிஸ் கட்சி கொள்கையும் திட்டமும் என்ன?முறையே பார்ப்பனரல்லாதார் முன்னேற்றமும்வகுப்புவாரி பிரதிநிதித்துவமும் தானே இதற்கு விரோதமாக "காங்கிரஸ கட்சி" யைச் சேர்ந்த பார்ப்பனரல்லாதாரிலும் சுயேச்சைக் கட்சியைச் சேர்ந்த பார்ப்பனரல்லாதாரிலும் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ஏறக்குறைய இரண்டு அல்லது மூன்று பார்ப்பனரல்லாதார் தவிர மற்றபடி அதுகளிலுள்ள எல்லாப் பார்ப்பனரல்லாதாரும் இக் கொள்கைகளை ஒப்புக்கொண்டவர்களே தவிர வேறில்லை. ஆகையால் பார்ப்பனர்களின் கட்சி ஜாலத்தைப்பற்றி யாரும் ஏமாந்து போய் கவலைப்பட வேண்டியதில்லை. தமிழ் நாட்டில் உள்ளதெல்லாம் இரண்டே கட்சி ஒன்று பார்ப்பன ஆதிக்கத்திற்கு பாடுபடும்கட்சி. மற்றொன்று பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கு பாடுபடும் கட்சி இரண்டிலும் வாய் வைக்கும் அலிக்கட்சி என்கிற தனி நபர்கள் சிலர் இருக்கலாம் அவர்களைப்பற்றி கவலை இல்லை ஆதலால் இந்த இரண்டு கட்சிகளின் தோல்வியும் வெற்றியும் பார்ப்பனர்களின் கட்சி ஜாலத்தில் முடிந்து விடும் என்று யாரும் நினைக்கமாட்டார்கள். வரப்போகும் மிஷனில் 'வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஒழிக்கவும், கூடப்போகும் புது சட்ட சபையில் தேவஸ்தான மசோதாவை ஒழிக்கவும் ஏற்பட்டால் மாத்திரம் "பார்ப்பன ஆதிக்கக் கட்சிக்கோ" "காங்கிரஸ கட்சிக்கோ" வெற்றியும் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக் கட்சிக்கு தோல்வியும் என்று சொல்லலாமே தவிர மற்றபடி வெற்றி தோல்வி ஒன்றுமில்லை இதைத் தவிர மலையாளக் குடிவார மசோதாவை சர்க்காரைக்கொண்டு அழித்தவரையில் பார்ப்பனக் கட்சிக்கு ஒரு வெற்றிதான். காங்கிரஸ கட்சி சுயராஜ்யம் சம்பாதிக்கும் தேசத்தை விடுதலை செய்யும் என்று சொல்வதும் பார்ப்பனர் அல்லாதார் கட்சியாய ஜஸ்டிஸ கட்சி உத்தியோகக் கட்சி தேசத் துரோகக் கட்சி என்று சொல்வதும் பார்ப்பனரினது அயோக்கியத்தனமும் பார்ப்பனரல்லாதாரினது அறியாமையும், மற்றும் சிலரினது வயிற்றுக்கொடுமையுமே அல்லாது வேறில்லை என்று உறுதி கூறுவோம்.

மற்றும் இரண்டொருவரும் ஆகிய சத்தியும், அறிவும், ஊக்கமும் உள்ள குறிப்பிட்ட 10 கனவான்களுக்காவது தோல்வி ஏற்பட வேண்டும் என்றும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி முதல் மந்திரியாகவும், ஸ்ரீமான் சி. வி. வெங்கட்டரமணய்யங்கார் இரண்டாவது மந்திரியாகவும், ஜனாப் அமீத்கான் மூன்றாவது மந்திரியாகவும் வரவேண்டுமென்றும் பிரார்த்தித்தோம். கோவையில் பனகால் அரசர் வெற்றிக் கூட்டத்திலும் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறோம். ஆதலால் இம்முடிவைக்கண்டு பார்ப்பனரல்லாத பிரமுகர்களோ, வாலிபர்களோ, தொண்டர்களோ மனச்சலிப்புக் கொள்ளக்கூடாது. இம் முடிவு நாம் செய்கிற வேலைக்கும் செய்யப்போகும் வேலைக்கும் வழியை ஒழுங்குபடுத்தி இருக்கிறது. மக்களின் அறியாமையை விளக்க தக்க சமயமாயும் ஏற்பட்டிருக்கிறது. பார்ப்பனரல்லாத மக்களுக்காக தியாகம் செய்யத் தயாராயிருப்பவர்களையும் பார்ப்பனரல்லாதார் கட்சி உத்தியோகத்திற்கு ஏற்பட்டதா அன்றி உண்மையாக அச்சமூகத்தின் முற்போக்குக்காக ஏற்பட்டதா என்று பரீக்ஷிப்பதற்கும் ஒரு உரைகல்லாய் இருக்கிறது. ஸ்ரீமான் நல் ராமசாமி முதலியார் தணிகாசலம் செட்டியார், நடேச முதலியார் போன்ற பார்ப்பனரல்லாதார் கட்சித் தலைவர்களின் சமூக பக்தியைப் பொது ஜனங்கள் அறிவதற்கு ஒரு அவகாசமும் கிடைத்திருக்கிறது. இனி ஏற்படப்போகும் பார்ப்பன அடக்கு முறைக்கு மார்பு கொடுக்கும் வீரர்கள் யார் என்பதையும் நமது சமூகத்தார் அறியக் காலம் வந்திருக்கிறது. ஆதலால் உலகம் இதோடு முடிந்து விட்டதென்றாவது சட்ட சபையைத்தவிர சுயமரியாதைத் தொண்டிற்கு வேறு இடமில்லை என்றாவது சட்ட சபைக்கு இத்தேர்தல்தான் முடிவான தேர்தல் என்றாவது கருதி யாரும் நம்பிக்கையை விட்டுவிட வேண்டியதில்லை. ஒத்துழையாமைக்கு யோக்கியதை ஏற்பட்டதெல்லாம் தியாகமும் தன்னல மறுப்புமே அல்லாமல் சட்டசபையால்ல ஆதலால், சுயமரியாதைக் குஉழைக்கஇஷ்டமுள்ளவர்களும் அவ்வுழைப்பினால் ஏற்படக்கூடிய கஷ்டங்களை அநுபவிக்கத் தயாராயிருப்பவர்களும் வெளியில் வர இதுவே தக்க சமயம். அதற்கேற்றநமது வேலைத்திட்டத்தையும் வெகு சீக்கிரத்தில் வெளியிட எண்ணியுள்ளோம்.

---

### ஊழியன்.

காரைக்குடி "ஊழியன்" அவதூறு வழக்கில் ஐப்பசி-மீ 24உ ராமநாதபுரம் சப் டிவிஷன் மேஜிஸ்ட்ரேட்டால் ஊழியன் பத்திராதிபர் என்ற முறையில் ஸ்ரீமான் ராய சொக்கலிங்கம் செட்டியார் விடுதலை பெற்றார். பிரசுரர் என்ற முறையில் ஒரு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டார்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கதி என்ன ஆவது? இத்தேர்தல் மூலம் உண்மையான சுதந்திரம் வருவதாயிருந்தால் முதலாவது நமது சுயமரியாதைக்கும் சுதந்திரத்திற்கும் பிறவி எதிரிகளான இப்பார்ப்பனர்கள் சுதந்திரம் வேண்டுமென்று சர்க்காரை கேட்டிருப்பார்களா? கேட்டாலும் அவர்களது பங்காளிகளான வெள்ளைக்காரர்கள் கொடுத்திருப்பார்களா? என்பதை நீங்களே நன்றாய் யோசித்து பாருங்கள். சுதந்திரம் கொடுப்பதற்கும் ஓட்டுரிமை கொடுப்பதற்கும் சர்க்காருக்காவது பார்ப்பனர்களுக்காவது நமக்குவேண்டியது இன்னதுஎன்றுதெரியாதா? மதுபானத்தை நிறுத்த சட்டசபைமூலம்தான் சண்டை போடவேண்டுமா? உத்தியோகம்கொடுக்க சட்டசபைமூலம்தான் கேட்கவேண்டுமா? தீண்டாமை ஒழிய சட்டசபையில்தான் தீர்மானம்கொண்டுவரவேண்டுமா? 150 வருஷமாய் நம்மை ஆண்ட ஒரு அரசாங்கத்திற்கு நமக்குவேண்டியதைசட்டசபைமூலம்கேளுங்கள் என்றால் இது போகாத ஊருக்கு தடம் காட்டுவதே அல்லாமல் வேறென்ன. "கொக்குத் தலையில் வெண்ணெய்வைத்து" அது உருகி கண்ணை மூடும்போது அதைப் பிடித்துக்கொள்ளலாம் என்பதுபோலில்லையா?

உண்மையாய் சர்க்காரும் பார்ப்பனரும் செய்யவேண்டுமென்று கருதினால் சட்டசபை இல்லாமல் செய்யமுடியாதா? அதுதான் அப்படி என்றாலும் உண்மையாகவே இப்போ.. சட்டசபை மெம்பர்களுக்கு என்ன யோக்கியதையை கண்டு ஓட்டர்கள் ஓட்டு செய்கிறார்கள் என்பதையாவது பாருங்கள் ஒருமெம்பருக்கு ரோட்டு மேஸ்திரி ஓட்டு போடச்சொன்னார் என்பதும், மற்றொரு மெம்பருக்கு வக்கீல்களும் வக்கீல் குமாஸ்தாக்களும் ஓட்டு போடச் சொன்னார்கள் என்பதும், மற்றொரு மெம்பருக்கு கவுண்டர் ஓட்டு போடச்சொன்னார் என்பதும், மற்றொரு மெம்பருக்கு பட்டக்காரர் ஓட்டு போடச் சொன்னார் என்பதும் ஆகிய இவைகள்தானே யோக்கியதையாய் இருக்கிறதே அல்லாமல் வேறென்ன? இது தவிர இந்த மெம்பர்களும் ஓட்டுபெற எவ்வளவு பொய்யும் புளுகும் அளக்கவேண்டியிருந்தது; எவ்வளவு அக்கிரமங்கள் செய்யவேண்டி இருக்கிறது. சட்டசபை வேலையானபிறகு இந்தஓட்டர்களுக்கும் மெம்பர்களுக்கும் மறு தேர்தல்வரை ஏதாவது சம்பந்தமுண்டா? எந்த ஓட்டரையாவது மெம்பர்களுக்கு அடையாளம் தெரியுமா? இந்த ஓட்டர்களின் தேவை இன்னது என்று மெம்பர்களுக்குத் தெரியுமா? மெம்பர்களின் சக்தி, யோக்கியதை, அவர்களது எண்ணம் இன்னது என்று ஓட்டர்களுக்குத் தெரியுமா? என்பதை யோசித்துப் பாருங்கள் வீணாய் நமது மக்களைப் பிரித்துவைத்து அவர்களை கண்ணியக்குறைவில் பழக்கி ஏமாற்றிப் பிழைக்க சர்க்காரும், பார்ப்பனரும் சேர்ந்து செய்த சூழ்ச்சியில் நமது மக்கள் அறியாமல்சிக்கிக்கொண்டு வெளியேற வகை தெரியாமல் நாசமாய் போகிறார்களே அல்லாமல் இத்தேர்தலால் வேறு என்ன நடக்கிறது. இவ்வித தேர்தல் முறைகளை இங்கிலீயில் வளர்ந்துவர நமது நாட்டுக்கு பெருங் கேடாகுமென்று மறுமுறையும் சொல்லுகிறேன்.

நிற்க தேர்தல் யோக்கியதைக்கு, படித்தவர்கள், படியாதவர்கள் என இரண்டு பிரிவுகள் சொல்லிக்கொள்ளப்படுகிறது. நமது நாட்டில் படித்தவர்களுக்கும் படியாதவர்களுக்கும் என்ன தாரதம்மியம்இருக்கிறது. படிக்காதவன் என்பவன் குற்றம் செய்கிறான் என்று வைத்துக்கொண்டால் படித்தவன் என்பவன் அக்குற்றத்திற்கு தக்க தண்டனையடையாமல் செய்து விடுவித்து மறுபடியும் அதே குற்றத்தைச் செய்ய தூண்டுகிறான்

குற்றம் செய்தவன் தண்டனை அடையத்தக்க நீதி நமது நாட்டில் ஒழுகினால் இவ்வளவு குற்றங்கள் நமது நாட்டில் வளருமா? இதற்கு இடையூறாயிருப்பவர்கள் படித்தவர்களா படிக்காதவர்களா? என்பதை யோசித்துப் பாருங்கள் ஒரு வக்கீல் ஒரு சமயத்தில் தனது பெருமையை சொல்லிக் கொள்ளும்போது 22 தடவை கொலை செய்தவனை 22 தடவை தப்பித்து வைத்தேன் என்று சொல்லிக் கொண்டாராம். இதுதான் படித்தவர்களின் மேன்மை இன்னமும் படித்தவர்கள் செய்யும் அக்கிரமங்களையும் படியாதவர்கள் செய்யும் அக்கிரமங்களையும் பார்த்தால் படித்தவர்களில் 100-க்கு 90 பேர் அயோக்கியர்கள் இருந்தால் படியாதவர்கள் 100-க்கு 10 கூட அகப்படமாட்டான். இம் மாதிரியான படிப்பை படிப்பு என்று சொல்லி அதற்கு யோக்கியதை கொடுத்து வந்தால் அந்த நாடு ஒழுக்கமடையுமா? யோக்கிய மடையுமா? ஆதலால் தற்கால யோக்கியதையும் தேர்தலும் தேச க்ஷேமத்தின் பிரதிநிதித்துவத்திற்கு யோக்கியமானதல்ல என்பதே எமது அபிப்பிராயம். தேச க்ஷேமத்திற்கு வேலை செய்பவர்களுக்கு சட்ட சபையில் ஒரு வேலையும் இல்லை. இந்த ஜில்லாவுக்கு இவ்வருஷம் பிரதிநிதிகளாய் நிற்கும் 4 மெம்பர்களும் செய்த பணச் செலவும்பட்ட கஷ்டங்களும் சட்ட சபை தேர்தலுக்கு செலவு செய்யாமல் ஓட்டர்களுக்கு ஓட்டின் தன்மையை படிப்பிப்பதிலோ உண்மையான பொதுநல சேவையைச் செய்வதிலோ செலவழித்திருந்தால் ஒருவருஷத்தில் இந்த ஜில்லாவுக்கு எவ்வளவோ நன்மைகள் ஏற்பட்டிருக்கும் என்றே சொல்லுவோம். ஆதலால் பனக்கால் ராஜாவின் வெற்றி விஷயத்தில் நமது பார்ப்பனர்கள் எண்ணம் பலிக்கவில்லை என்பதைப் பொறுத்தவரை நாம் திருப்திகொள்ள வேண்டியதோடு நமது முற்போக்குக்கு இடையூறாக எவ்வளவு தூரம் நமது பார்ப்பனர்கள் முயற்சி செய்கிறார்கள் என்பதை பாமர ஜனங்களும் தெரிந்துகொள்ள இது ஒரு சந்தர்ப்பமாய் ஏற்பட்டது என்பதைப் பொறுத்தவரையும்தான் கொண்டாடத் தக்கதே அல்லாமல் நாட்டிற்கோ சமூகத்திற்கோ பிரமாதமான நன்மை எதுவும் இதனாலேயே உண்டாகிவிடாது. சட்ட சபை அங்கத்தினர் என்பது சர்க்கார் உத்தியோகம் பட்டம் முதலியதுகள் போல ஒரு பதவியே அல்லாமல் வேறல்ல. உத்தியோகம் பெறுவதற்கும் பட்டம் பெறுவதற்கும் சர்க்கார்

## தேர்தல் முடிவு.

பின்னர் வந்த செய்தி.

(6வது பக்கம் 2வது பத்தியின் தொடர்ச்சி.)

### இந்தியா சட்ட சபைக்கு.

சென்னை நகரத் தொகுதி.

ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார்.

தென் ஆற்காடு—செங்கற்பட்டு.

ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார்.

### சென்னை சட்ட சபைக்கு.

சித்தூர் கிராமத் தொகுதி.

ஸ்ரீமான்கள்

[illegible] பகதூர் முனுசாமி நாயுடு

சி. ஆர். பார்த்தசாரதி ஐயங்கார்.

மலையாளம் கிராமத் தொகுதி.

கே. மாதவன் நாயர்.

எம். கிருஷ்ணன் நாயர்.

விசாக பட்டணம்.

ஸ்ரீமான்கள்.

வெங்கடபதிராஜு

சி. வி. எஸ். நரசிம்ம ராஜு

## கார்பரேஷன் பிரசிடெண்டு.

சென்னை நகர் முனிசிபல் பதவிக்கு 15உ நடந்த தேர்தலில் பார்ப்பனக் கட்சியைச் சேர்ந்த சாமி வெங்கடாசலம் செட்டியாருக்கு 19 ஓட்டுகளும், பார்ப்பனரல்லாதார் கட்சியைச்சேர்ந்த ஸ்ரீமான் கோபதி நாராயணசாமி செட்டியாருக்கு 29 ஓட்டுகளும் கிடைத்து ஸ்ரீமான் கோபதி தெரிந்தெடுக்கப்பட்டார்.

## பாப்பி நாள்.

ஐரோப்பிய மஹாயுத்த சமாதான உடன்படிக்கை தினம் பொதுவாக பாப்பி நாள் என்று அழைக்கப்படுகிறது. போர்க்களமானது சண்டை நிறுத்தமான பின்னர் பாப்பி என்னும் செவந்த வர்ண பூக்களால் பரப்பப்பட்டமையால் இப்பெயர் பெற்றது. நவம்பர்மீ 11-உ ஷை போரில் உயிர் துறந்த வீரர்களை நினைத்தற்பொருட்டு 2 நிமிடம் மௌனமாயிருக்க வேண்டுமென்றும் கோவில்களில் விசேஷ ஆராதனையாதிகள் நடத்தவேண்டுமென்றும் அரசாங்கம் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஈரோடு தாலூகாவில் பல ஊர்களிலிருந்தும் அங்ஙனமே நடத்தியதாக நமக்கு பல செய்திகள் கிடைத்திருக்கின்றன.

---

உத்தியோகஸ்தர்களுக்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும் பணம் செலவு செய்யவேண்டியது போல் சட்ட சபை மெம்பர் பதவி பெறுவதற்கு பிரசாரகர்களுக்கும் தரகர்களுக்கும் ஓட்டர்களுக்கும் பணம் செலவு செய்யவேண்டும். இவ்வளவுதான் வித்தியாசமேயொழிய வேறொன்றும் பிரமாத வித்தியாசமில்லை. அதிக செலவில்லாமல் இப்பதவி கிடைப்பதானால் ஏன் நம்மவருக்கே கிடைக்கக்கூடாது என்று பார்ப்பனரல்லாதார் ஆசைப்பட பாத்தியமுண்டு என்பதையும் ஞாபகமூட்டுகிறேன்.

## கனம் பனகால் அரசரின் வெற்றி.

### எங்கும் கொண்டாட்டம்.

#### வாலாஜாபாத்.

10—11—26ல் ஷையூர் இந்துமத பாடசாலையில் மாணவர், ஆசிரியர், பெரியோர் ஆகியஎல்லோரும் ஒன்று கூடினர் அதுகாலை திரு. நாகபூஷண முதலியார் அவர்கள் கனம் பனகால் அரசரின் வெற்றியைப் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். பின்னர் எல்லோருக்கும் கற்கண்டு வழங்கப் பட்டது. வெற்றிப் பறையை ஊரெங்கும் சாற்றச் செய்தனர். பனகால் அரசர் நீடு வாழ்க! வாழ்க! வாழ்க!! வாழ்கவே!!! என்று வா. தி. மாசிலாமணி அறிவிக்கிறார்.

#### மதுரை.

10—11—26ல் மாலை ஸ்ரீமான் அலாவுதீன் ராவுத்தர் அவர்கள் கட்டிடத்தில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் குழுமி கனம் பனகால் ராஜாவின் வெற்றி கொண்டாடப்பட்டது. பனகால் ராஜாவுக்கும் நியாயக் கட்சிக்கும் “ஜே” என்ற முழக்கமாகவே இருந்தது. சந்தனம், புஷ்பம், வெற்றிலை பாக்கு, சர்க்கரை முதலியவை வழங்கப்பட்டன. ஆர். எஸ். நாயுடு அவர்களுக்கு மாலை சூட்டப்பட்டது. ஸ்ரீமான்கள் அலாவுதீன் ராவுத்தரவர்களையும் ஆர். எஸ். நாயுடு அவர்களையும் மிகப் பாராட்டினார்கள். கீழ்க்கண்ட வெண்பா ஒவ்வொரு கடையிலும் அட்டையில் ஒட்டி தொங்கவிடப்பட்டிருந்தது.

இந்துமதச் சட்டம் இசைத்துப் புகழ்
வாய்ந்த
மந்திரியாராம் பனகால் மன்னரொடு—
தந்திரமாய்
மல்லாடி தோல்வியுற்றார் வாயாடி வம்பாடும்
அல்லாடி கிருஷ்ணய்ய ராம்.

இப்பெருங் கூட்டத்தினிடை அநேக பிராமணரும் கூடிக்குலாவியது மிகப் பாராட்டத்தக்கது. என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

#### மதுரை மறவர் குலத்தாரின் மகிழ்ச்சி.

தென்னிந்தியாவில் ஜனநாயகக் கட்சி என விளங்கும், ஜஸ்டிஸ் கட்சித் தலைவரான கனம் பனகால் அரசர் வெற்றியைக் கேட்டு மறவர் குலத்தாரனைவரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர். மறவர் தெருக்களிலெல்லாம் ஆரவாரமாயிருந்தது. ஒவ்வொருவர் வீட்டிலும் கற்கண்டு வழங்கப்பட்டது. மறவர் குல சங்கத்தார் சந்தோஷத் தந்தி ஒன்று அனுப்பி வைத்தனர். மறவர் குலத்தாரனைவரும் ஒரே கட்டாக நமது கட்சியை ஆதரிப்பது மிகவும் போற்றத்தக்கது என ஸ்ரீமான் மயில்வாகனன் திராவிடனில் எழுதியிருக்கிறார்.

#### காரைக்கேணி.

பார்ப்பனர்களின் மாயவலையில் சிக்கி, முன்னேற்றமில்லாது தவித்துக் கிடந்த பார்ப்பனரல்லாரின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட தியாகியும், நமது உண்மையான கட்சிக்கு விதை ஊன்றி முளைக்கச் செய்த இரு தலைவர்களுக்குப் பின்னால் முளைத்த மரத்தில் பழுத்த பழத்தை பசிக்குத் தின்னப் பறித்துக்கொடுக்கத் தோன்றிய மஹானும், இந்துமத பரிபாலன மசோதா நிறைவேற்றிய காலத்தில் இடைவிடாது வந்துகொண்டிருந்த விதண்டாவாத திருத்தப் பிரேரபணைகளுக்கெல்லாம் அஞ்சாது சமாதானம் சொல்லி முடிவில் வெற்றி பெறச் செய்த வீரரும், இந்தியாவின் ஏழை மக்களைத் துன்புறுத்திய தென்னாப்பிரிக்காவின் தூதர்களுக்கு விருந்தளித்து நியாயம் உரைத்து அவர்கள் மனத்தைக் குளிர்வித்து அத்துன்பம் தவிர்க்க வழி தேடிவைத்த மன்னரும், சொல்லி முடியாத இன்னும் எத்தனையோ நன்மைகள் செய்தவரும் ஆகிய நமது பனகால் அரசர் வெற்றி பெற்றார். ஜெயக்கொடி நாட்டிய நம் தலைவர் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க. கூடியிருந்த ஜனங்களுக்கு சர்க்கரை வழங்கிய பின்னர் ஜே! ஜே!! ஜே!!! என்ற கோஷத்துடன் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் திராவிடனில் எழுதுகிறார்.

## நமது மாபெரும் வெற்றி.

### பார்ப்பனர் குறும்புகள் பலிக்கவில்லை.

### சுதேசமித்திரனின் படுமோசம்.

பனகால் அரசர் அவர்களும், அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரென்ற ஓர் வக்கீல் பஞ்சாங்கப் பார்ப்பனரும் சட்ட சபைக்கு அபேட்சகர்களாக நின்றார்கள். பஞ்சாங்கப் பார்ப்பனர், காபி கிளப் பார்ப்பனர், உத்தியோகப் பார்ப்பனர், பத்திரிகைப் பார்ப்பனரென்ற பல்வேறு பார்ப்பனப் படைகளும் ராஜாபகதூரை தோற்கவைக்க பூணூலைத் திருகிவிட்டுக்கொண்டு கண்டவிடமெல்லாம் ஓடினார்கள் கூட்டங்கள்தோறும் ராஜாபகதூர் தோற்றுவிட்டனரென்று ஊளை இட்டனர். சுதேசமித்திரனும் வழக்கம்போலக் கூறும் புத்தனமாக ராஜாபகதூர் தோற்று விட்டாரென்றும் பொய்யும், புளுகும் எழுதி பொது மக்களை மோசம் பண்ணி வந்தான். 9ந் தேதி காலை உதயமாயிற்று. ஊரெங்கும் ஜெயபேரிகை முழங்கலாயிற்று. வெற்றிக்கொடி நாட்டலாயிற்று. இனி பொல்லாப் பார்ப்பனக் கூட்டம் என் செய்யும்? பார்ப்பனராசை பஞ்சாங்கத்தோடும், பழைய தருப்பைப் புல்லோடும் இனியாவது நிற்குமாவென்று பார்ப்போம்?

பெ. பெரி., கொழும்பு.

#### திருநெல்வேலி,

நியாயகக்ஷித் தலைவரும் சென்னை மாகாண முதல் மந்திரியுமான கனம் பனகால் அரசர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சென்னை மாகாண சட்டசபை அங்கத்தினர் பதவிக்கு மத்திய நிலச்சுவான்தார் (ஜமீன்தார்கள்) தொகுதியில் நமது அரசருக்கு போட்டியாக ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், அபேக்ஷகராக நின்று பகீரத பிரயத்தனம் செய்தும் தேர்தலில் வெற்றியடைந்தது நமது பனகால் அரசரே! கனம் பனகால் அரசரின் வெற்றியினால் ஏற்பட்ட நன்மை என்ன? சுயமரியாதையும் (சகோதரத்வம்) சமஉரிமையும் என்பவைகளே! அதுவே ஜஸ்டிஸ் கட்சியின் உண்மையான தத்வம். ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணசாமி

## புலால

“படிப்பது திருவாய்மொழி இடிப்ப
பெருமாள் கோவில்.”

“இலங்கு முயிர் உடலனைத்தும் ஈசன் கோவில்” “எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்” என்ற பெரியார் வாக்கியங்களினால் ஜீவராசிகளின் உடல்களெல்லாம் கோவில்கள் என்பது போதரும். எனவே ஆடு, மாடு; கோழி முதலிய ஜீவன்களைவதைத் துண்ணல் கோவில்களை இடித்தழித்தல் போலாம். விபூதி ருத்திராக்ஷங்களை அணிபவரும், துவாதச நாமங்களை இடுபவரும், நாள் தவறாமல் கோவில் பிரதக்ஷிணம் செய்பவருங்கூட இத்தீயதொழிலைச் செய்கிறார்கள். இது “படிப்பது திருவாய்மொழி இடிப்பது பெருமாள் கோவில்” என்பது போலிருக்கிறது. அன்பர்களே! நீங்கள் உண்மையில் இரக்க முடையவர்களாயிருந்தால், உண்மையில் கடவுளை வழிபடுகிறவர்களாயிருந்தால் எவ்வுயிரையுங் கொன்று தின்னலாகாது. “அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன், உயிர் செகுத் துண்ணாமை நன்று”—குறள்.

தங்கவயல் ஜீவகாருண்ய சங்கம்.

---

## பெருந்தலையூர் ஆதி திராவிட முன்னேற்ற சங்கத்திறப்புவிழா.

23—10—26ல் ஸ்ரீமான் செ. வீரன் அவர்கள் அவைத் தலைமையின் கீழ் பெருந்தலையூரில் ஷை சங்கத் திறப்புவிழா இனிது கொண்டாடப்பட்டது. சுமார் 200 ஆதி திராவிட சகோதரர்கள் குழுமியிருந்தனர். ஸ்ரீமான் கே. எம். தானியேல் மேஸ்திரியார் ஸ்ரீமான் வீரய்யன் எம். எல். சி. அவர்களுடைய ஊழியத்தைப் பாராட்டிப் பேசியதோடு ரெவினியூ போர்டு ஆர்டர் 1187-ல் உள்ள தர்க்காஸ்து வகை விபரங்களையும், தங்கள் பரம்பரைக் கைத்தொழிலான நெசவை மீண்டும் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யும்படி கவர்ன்மெண்டைக் கேட்டுக் கொள்ளும்படியாயும் தெளிவாகப் பேசினார். ஸ்ரீமான்கள் செ. வீரன் (பிரசிடெண்டு) கே. சாமுவேல் (காரியதரிசி) கே. தேவசிகாமணி (பொக்கிஷதார்) டி. குட்டியப்பன், கே. வேதமாணிக்கம், எம். தேவதாஸ், க. சின்னப்பன், வெ. பொன்னையன், மா. பரமானந்தம், பெரியதனம் குட்டி, பூ. நாகப்பன், கனகரத்தினம் ஆகியோர் நிர்வாக அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட பின்னர் கூட்டம் முடிவுற்றதென ஸ்ரீமான் கே. எம். தானியேல் மேஸ்திரி அறிவிக்கிறார்.

---

அய்யர் தோல்வியினால்வந்த நன்மை என்ன? 100க்கு 3 பேர்களுள்ள படித்த வகுப்பார் என்று சொல்லப்படுகிறவர்கள் பழம் பெருக்கச்சி மகாகளாகிய நம்மை அடிமைகளாகவும், சுயமரியாதையற்றவர்களாகவும், மிருகங்களாகவும் நடத்த முடியாமல் போனதே ஓர் பெரும் நன்மையாகும்.

ஜஸ்டிஸ் அபிமானி

...ளுக்கு
...லை சேர்மன்
...காதர் சாயபு அவர்கள்
...துகூடும் சபையில் நிறைவேற்றக்
கொண்டுவந்திருக்கும் தீர்மானங்கள்.

மகா-ா-ா-ஸ்ரீ ஈரோடு முனிசிபல் சேர்மன் அவர்களுக்கு கவுன்சிலரும் வைஸ் சேர்மனுமாகிய கே. காதர் சாயபு எழுதிக்கொண்டது என்னவென்றால் அடியிற் கண்டிருக்கும் தீர்மானங்களை கவுன்சிலில் அங்கீகரிக்க பிரேரேபிக்க நான் உத்தேசித்திருப்பதால் அடியில் கண்ட தீர்மானங்களை அடுத்த கவுன்சில் மீட்டிங்கின் அட்ஜெண்டாவில் முதல் விஷயமாக வைத்து அட்ஜெண்டாவும் நோட்டீசும் அனுப்பக்கேட்டுக் கொள்ளுகிறேன்.

விஷயங்கள்.

1. கவுன்சிலில் பெரும்பாலோர் தமிழ் தெரிந்தவர்களாயிருப்பதால் இனி நடக்கும் ஒவ்வொரு மீட்டிங்குகளிலும் மினிட் புஸ்தகத்தில் சப்ஜெக்ட்டுகளும் தீர்மானங்களும் தமிழிலேயே எழுதவேணுமாய் இச்சங்கம் தீர்மானிக்கிறது.

2. மீட்டிங்கில் அட்ஜெண்டா பேப்பரில் கண்டிருக்கும் விஷயங்கள் நீங்கலாக இதர எந்த விஷயங்களையும் ஆலோசனைக்கு வைக்கக்கூடாதென்றும், மீட்டிங்கு நோட்டீஸ் அனுப்பியபின் அவசரத்தை உத்தேசித்து ஏதாவது விஷயங்களை மீட்டிங்கில் கவனிக்க வேணுமென்று சேர்மன் அபிப்பிராயப்பட்டால் அவசரக் காரணங்களைக் கண்டு சேர்மன் அவர்கள் சப்ளிமெண்டல் அட்ஜெண்டா அனுப்பவேணுமென்றும் அப்படி இல்லாதவரை அவசரத்தை உத்தேசித்தும் யாதொரு விஷயங்களையும் சேர்மன் மீட்டிங்கில் வைக்கக்கூடாதென்றும் இச்சங்கம் தீர்மானிக்கிறது.

3. கவுன்சில் மீட்டிங்குகளுக்கு ஆஜரியிருக்கும் கவுன்சிலர்களை குறித்து அவர்கள் வந்த டைமும் போகும் டைமும் அவர்கள் வரும்பொழுதும் போகும் பொழுதும் ஆலோசிக்கப்படும் விஷயங்களின் அட்ஜெண்டா நெம்பரை மீட்டிங் நடவடிக்கைகளில் சேர்மன் அவர்கள் குறிக்கவேணுமென்றும் இச்சங்கம் தீர்மானிக்கிறது.

4. மீட்டிங்கில் செய்யும் தீர்மானங்களையும் முடிவையும் குறித்து விண்ணப்பதாரர்கள் அல்லது மனுதாரர்களுக்கு தீர்மான விபரம் தெரியப்படுத்தவேண்டிய கேசுகளில் மீட்டிங் தேதியிலிருந்து மூன்று தினத்திற்குள்ளாக உத்திரவை சேர்ப்பிக்கவேணுமென்று இச்சங்கம் தீர்மானிக்கிறது.

5. ஒவ்வொரு மீட்டிங்கு நடவடிக்கைகளும் கோயமுத்தூர் ஜில்லா கெஜட்டில் பிரசுரமானவுடன் ஷை கெஜட்டுகள் ஒன்று ஒவ்வொரு கவுன்சிலர்களுக்கும் பிரசுரமான மூன்று தினத்திற்குள் அனுப்ப வேண்டுமென்றும் இச்சங்கம் தீர்மானிக்கிறது.

6. முனிசிபல் சம்பந்தமான விஷயங்களைக் குறித்து யாராவது மானேஜரிடமாவது அல்லது சேர்மென் அவர்களிடமாவது தபால் மூலமாகவோ செய்து அதைப் பெற்றுக் கொண்டதற்காக அவர்கள் ஆஜர் செய்யும் ரசீதில் கையெழுத்து செய்து கொடுக்க கோரினால் மறுதலிக்காமல் செய்து கொடுக்க வேண்டியது அவசியமென்று இச்சங்கம் தீர்மானிக்கிறது.

7. சேர்மன் அவர்கள் கூடுமானவரை முனிசிபல் ஆபீசுக்கு வந்து முனிசிபல் வேலைகளைச் செய்துவர வேணுமென்றும் அப்படி செய்யாமல் சேர்மன் அவர்கள் வீட்டிலேயிருந்து முனிசிபல் வேலைகளைச்செய்து வருவதில் முனிசிபல் சிப்பந்திகள் சரிவர ஆபீசிலிருந்து வேலை செய்துவர தவக்கம் ஏற்பட ஆஸ்பதமாய் இருக்கிறதென்றும், மேலும் முனிசிபல் சிப்பந்திகள் சேர்மன் வீட்டிற்குப்போய்வருவதனாலும் காத்திருப்பதினாலும் சிப்பந்திகளுடையகாலம் சரிவர உபயோகப்படாமல் வீணாக்கப்பட்டு முனிசிபல் வேலைகளுக்கு குந்தகம் ஏற்பட்டு வருகிறதென்றும் மேலும் வீட்டில் வேலைசெய்து வருவதால் முனிசிபல் ரிக்கார்டுகளை சேர்மன் அவர்கள் வீட்டிற்குக் கொண்டுபோகவும் வைத்து வைக்கவும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டு சேர்மன் அவர்கள் ஊரில் இல்லாத சமயம் வேலைகளை கவனித்துவர லாயக்கான அதிகாரமுள்ள வைஸ் சேர்மன் அவர்களுக்கு ஆபீசில் ரிகார்டுகள் இல்லாமல் வேலைசெய்ய குந்தகம் ஏற்பட்டு வருவதுடன் சேர்மன் அதிகாரம் நடத்த லாயக்குள்ள வைஸ்சேர்மன் அவர்களுக்கு பேபர்களை கிடைக்க ஒட்டாமல் செய்யக்கூடிய சந்தர்ப்பங்களுக்கும் இடம் உண்டாகிறது என்று இச்சங்கம் அபிப்பிராயப்படுகிறது.

8. அட்ஜண்டா பேபரில், சாங்க்ஷனுக்காக கொண்டுவரப்பட்ட பில்களை இன்ன இன்ன விஷயத்திய பில்கள் இன்ன இன்ன என்பதாய் தனித்தனியாய் அட்ஜெண்டாவில் குறித்து எழுதி அனுப்பவேணும் என்று இச்சங்கம் தீர்மானிக்கிறது.

மகா-ா-ஸ்ரீ ஈரோடு முனிசிபல்
சேர்மென் அவர்களுக்கு
கே. என். கிருஷ்ணசாமி செட்டியார்
[கௌன்சிலர்]
விடுத்துள்ள கேள்விகளாவன.

அடியிற் குறிப்பிட்டிருக்கும் (Interpellation) கேள்விகளுக்கு அடுத்த மீட்டிங்கில் பதில் சொல்ல கோருகிறேன்.

1. சேர்மென் அவர்கள் வீட்டிற்கு முன்னால் போட்டிருக்கும் பந்தலானது எத்தனை காலமாக இருக்கிறது? அதற்கு வரி செலுத்துகிறாரா?

2. சேர்மென் அவர்கள் முனிசிபாலிட்டிக்கு செலுத்தவேண்டிய வரிகளில் எந்தெந்த வகை வரிகளை இன்னும் செலுத்தாமலிருக்கிறார்? இரண்டு மூன்று வருஷ காலமாய் வரிகொடாமல் நிலுவை வைத்திருப்பதுண்டா? தான் கொடுக்கவேண்டிய தொழில் வரியைச் சரிவரச் செலுத்திவருகிறாரா? அதில் எத்தனை காலாவதியிலுள்ள வரியை கட்டாமல் பாக்கி இருப்பதைச் சொல்லுவாரா?

3. சேர்மென் தன் வீட்டின் கக்கூஸ் வரியைச் செலுத்தி வருகிறாரா?

4. சேர்மென் அவர்கள் மோட்டார் சைகிள் வைத்துக்கொள்வதாக கோரிக்கொண்டதினால் கவுன்சிலில் மாதம் ஒன்றுக்கு 40 ரூபாய் சாங்க்ஷன் செய்ததுண்டா? அப்படியிருந்தால் அந்தப்படி மோட்டார் சைகிள் ஏன் உபயோகப்படுத்துகிறதில்லை? ஆனதால் அந்த அலவன்சை இனிமேல் வாங்காமல் இருக்க ஒப்புக்கொள்ளுகிறாரா?

5. மோட்டார் சைகில் எத்தனை காலமாக சேர்மென் வைத்துக்கொண்டிருக்கிறார்? அதற்கு முனிசிபாலிட்டிக்கு லைசென்ஸ் பீஸ் செலுத்தி வருகிறாரா?

6. சேர்மென் அவர்கள் முனிசிபாலிட்டிக்குச் சொந்தமான பர்னிச்சர் சாமான்களை தன் வீட்டிற்குக் கொண்டுபோய் உபயோகப்படுத்துகிறதுண்டா? அப்படியானால் உபயோகப்படுத்தும் சாமான்களுக்கு ஆபீசில் ஜாப்தா உண்டா?

7. முனிசிபல் ஆஸ்பத்திரிக்குள் மோட்டார் ஷெட் கட்டப்பட்டிருக்கிறதா? அதற்குள் முனிசிபல் மோட்டார் லாரியை நிறுத்தும்படியாய் கவுன்சிலில் சாங்க்ஷன் ஆனதுண்டா? அந்த ஷெட்டில் சாங்க்ஷன் ஆனது முதல் ஷை லாரி நிறுத்தப்பட்டு வருகிறதா?

8. ஆஸ்பத்திரியில் இருக்கும் பிணம் அறுக்கும் ஷெட்டை அப்புறப்படுத்த கவுன்சிலில் சாங்க்ஷன் ஆனதுண்டா? ஏன் அந்தப்படி அப்புறப்படுத்தவில்லையென்று சொல்லுவாரா?

9. வளையக்காரத்தெருவில் கன்னியாபரமேஸ்வரி மடத்துக்குப்பின்னால், ஒருபைப்புப் போடும்படி கவுன்சிலில் சாங்க்ஷன் ஆனதுண்டா? அதை இதுவரை போடாமலிருப்பதற்கு காரணம் என்னவென்று சொல்லுவாரா?

10. சேர்மென் அவர்கள் வீட்டில் நாய் வளர்த்து வருகிறாரா? அப்படியானால் எத்தனைகாலமாய்வளர்த்துவருகிறார். அதற்குச் சரியான்படி வரி செலுத்தி வருகிறாரா? இல்லாவிட்டால் ஏன் செலுத்தவில்லை என்பதற்கு சட்டப்படி காரணங் கூறுவாரா?

11. நமது முனிசிபாலிட்டியில் ஆபிஸ் பியூன்கள் எத்தனை? வார்டு பியூன்கள் எத்தனை? இவர்களுக்கு ஆபீஸ் சீல் இட்ட பில்லை கொடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படியிருந்தால் ஏன் அவர்கள் பில்லை தரித்துக் கொள்வதில்லை என்பதற்குக் காரணங் கூறுவாரா?

## புதுக்கோட்டை சமஸ்தான 6-வது மகாநாடு.

இம்மாதம் 18, 19-உகளில் நகரில் கூட்டுவதாயிருந்த சமஸ்தான 6வது மகாநாட்டை டிசம்பர்மீ 2, 3உ வியாழன் வெள்ளிக் கிழமைகளில் நடத்துவதென உபசாரணைக் கமிட்டியார் முடிவு செய்திருக்கிறார்கள். மகாநாட்டில் தீர்மானங்கள் கொண்டுவர விரும்பும் கனவான்கள், இம்மாதம் 25-உக்குள் "ஆ. சு. நாகரெத்தினம், பொதுக் காரியதரிசி, சமஸ்தான மகாநாடு, புதுக்கோட்டை" என்ற விலாசத்திற்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வி. எஸ். கணபதி சாஸ்திரிகள், ஆ. சு. நாகரத்தினம், பொதுக்காரியதரிசிகள்.
ஜி. சுந்தரேசய்யர், உபசாரணைக்கமிட்டிதலைவர்.

## நாகை தென்னிந்திய பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம்.

24-10-26-ல ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு மேல்கண்ட சங்கத்தின் சார்பில் திருவாளர் வெ. ப. காயாரோகணம் பிள்ளை பங்களாவில் கூட்டம் கூட்டப்பட்டது. கடவுள் வணக்கம் செய்து திருவாளர் திருஞான சம்பந்த வீரமுண்டார் அவர்களால் பிரேரேபிக்கப்பெற்று, திரு. சுந்திரராஜால் ஆதரிக்கப்பட்டு கரகோஷத்தினிடையே திரு கே. சி. சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் (Bar-at-law) அக்கிராசனம் வகித்தார்.

இக்கழகத்திற்கு விஜயம் செய்திருந்தவர்கள் உள்பட சுமார் (300) முந்நூறு பேர். அவர்களில் முக்கியஸ்தர்கள் :— திருவாளர்கள் நாகை தாலூகா போர்டு தலைவர் S. இராஜகோபால் நாயுடு, முனிசிபல் சேர்மென் M. V. சேகுபரீது மரைக்காயர், வெ. ப. காயாரோகணம் பிள்ளை, M. K. குப்புசாமி பிள்ளை, S. P. K. சோமசுந்திரம் பிள்ளை, T. K. விஜயராகவலு நாயுடு, அ. ரு. சி. கோ. ராமநாத முதலியார், A. துரைசாமி பிள்ளை, K. துரைசாமி இன்னும் சிலரும் வந்திருந்தார்கள். பின் தலைவர் அவர்கள் முன்னுரையில் இச்சங்கத்தின் அவசியத்தைப்பற்றி எடுத்துச்சொல்லி, சென்னையிலுள்ள சங்கத்தை ஒட்டி ஸ்தாபிக்கவேண்டும் என்றும் சொல்லி, தன்னைத் தலைமை வகிக்கச் செய்ததற்கு வந்தனங்கூறி, வாலிபருடன் கூடி தன்னுலியன்றவரை உழைக்கத் தயாராய் இருப்பதாகவும் மொழிந்து ஆசனத்தில் அமர்ந்தார். பிறகு கல்வியின் முக்கியத்தைப்பற்றி திரு. M. K. குப்புசாமி பிள்ளை அவர்கள் எடுத்துச் சொன்னார். பிறகு வக்கில் திரு. இராஜரெத்தினம் பிள்ளை வாலிபர்களைப்பற்றி பேசியபின் திரு. திருஞானசம்பந்த வீரமுண்டார் அவர்கள் பேசும்போது சென்னையில் ஒருவர் பிராமணர் அல்லாதவர்களுக்கு மூளை இல்லை என்று சொன்னார். அன்னவருக்கு, நம்மவர்களுக்கு மூளை உள்ளதைத் தெரியப்படுத்த இச்சங்கம் ஒரு ஆதாரம் ஆகும் எனவும், வருணாசிரமம் இந்துமதத்தைவிட்டு துறத்த வேண்டும் எனவும் பேசி முடித்தார்.

பிறகு திரு. V. P. காயாரோகணம்பிள்ளை அவர்கள் வாலிபர்கள் ராஜீய விஷயத்தில் தலையிடக்கூடாது என்று சொல்லி முடித்தார். பின் சிக்கல ஊழியர் கழகக் காரியதரிசி திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தீண்டாமையின்கொடுமையைப்பற்றி நிரம்ப விரிவாக பேசியபின் திரு. நா. ப. காளியப்ப தேவர் அவர்கள் பேசும்போது வாலிபர் சங்கத்தின் அவசியத்தைப்பற்றிப் பேசிவிட்டு பின் பார்ப்பனர்கள்தான் கட்சிகள் பிரிக்கிறார்கள் என்றும்உதாரணமாக காபிகிளப்பை எடுத்துக்கொள்ளுவீர்களேயானால் அங்கே ஒரு விசாலமான இடத்திற்குள் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் என்று நம்மை அனைவரையும் இழிவு படுத்தி போர்டு போட்டிருக்கிறார்கள் என்றும், பிறகு, தான் ஒரு நாள் ரயில்வே பிளாட்பாரத்திற்குள் போயிருக்கும்போது அங்குள்ள எக்கின்பாதம் புத்தகசாலைக்குச்சமீபத்தில் ஒரு பார்ப்பனபையன் "டுடுல்" என்னும் ஆங்கிலப்பத்திரிகை வைத்து படித்துக்கொண்டிருந்தான் என்றும் அதில் திரு. எஸ். சீனிவாச அய்யங்காரின் படமும் இன்னும் சென்னைக் சட்ட சபைக்கும் காங்கிரஸ் அபேட்சகர்களின் படத்தைப் போட்டு நமது காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு வருகிற தேர்தலில் ஓட்டுக் கொடுங்கள் என்று அதில் எழுதி இருந்தது என்றும் அந்த பத்திரிகையை திரு. காளியப்பன் அவர்கள் வாங்கி பார்த்துக்கொண்டிருந்தார் என்றும் அதற்குள் இந்த பார்ப்பான் திரு. சீனிவாச அய்யங்காரின் படத்தைக்காட்டி இவர்தான் சீனிவாசய்யங்கார் இவரைவிட காங்கிரசில் யோக்கியமானவர்கள் இல்லை ஆகையால் தான் காங்கிரசால் டில்லி சட்ட சபைக்கு அபேக்ஷகராக நிறுத்தப்பட்டிருக்கிறாரென்றும் சொல்லிவிட்டு பிறகு பார்ப்பான், அய்யங்காருக்கு எதிரியாக ஜஸ்டிஸ் கட்சியில் திரு சங்கர செட்டியை நிறுத்தியிருக்கிறார்கள், அவருக்கு ஒரு ஓட்கூட கிடைக்காது என்றும், ஐயங்காருக்குத்தான் எல்லா ஓட்டுகளும் கிடைக்குமென்று சொன்னார் என்றும் சொல்லி நாகையிலிருந்து 200 மைலுக்கு அப்பால் இருக்கும் திரு. சீனிவாச அய்யங்காருக்கு இந்த "டுடுல்" பேப்பர் படித்த பையன் அண்ணன்மகனா? இல்லையே! பாருங்கள்! அந்த ஜாதி ஒற்றுமையின் தன்மையை ஆகையால் நீங்களும் நமது பார்ப்பனரல்லாத தலைவர்களிடத்திலும் அன்பு காட்ட வேண்டும் என்று சொல்லி பார்ப்பன தந்திரங்களை அங்கு வந்துள்ள அனைவரும் தெரியும்படி கூறி முடித்தார். திரு எம். கே. குப்புசாமி பிள்ளை அவர்கள் இனமாக வாலிபர்களுக்கு ஒரு கட்டிடம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். அதுவரை திரு வி. பி. காயாரோகணம் பிள்ளை அவர்கள் அவர் பங்களாவில் வைத்துக்கொள்ள இடங்கொடுத்தார். மாலை 4-மணிக்கு சிற்றுண்டி அருந்திய பின்னர் ஆபீஸ் உத்தியோகஸ்தர்கள் நியமனம் நடந்தது. தலைவர் கே. சி. சுப்பிரமணியம் செட்டியார் (Bar-at-law) அவர்கள். உபதலைவர்கள் திரு எம். கே. குப்புசாமி பிள்ளை, திரு. சௌந்திரராஜலு நாயுடு, மாணவர் டி. என். ராமசாமி, பொக்கிஷதார் திரு. வி. பி. காயாரோணம்பிள்ளை, பொதுக் காரியதரிசி திரு. டி. அய்யாக்கண்ணுசெட்டியார் கூட்டுக்காரியதரிசி திருவாளர்கள் துரைராஜா, அப்துல்ரஜாக் ராவுத்தர் இன்னும் 14 நிர்வாக சபை அங்கத்தினர்கள் எடுக்கப்பட்டது. பின்னர் ஒரு லைபொரி எற்படுத்தி அங்கு வந்துள்ள கனவான்களிடம் நன்கொடை வசூலிக்கப்பட்டது. மேலேகண்ட கனவான்களுக்கு நம்முடையவந்தனத்தைச் செலுத்த கடமைப்பட்டுள்ளோம். பிறகு தலைவர் அவர்கள் சங்கத்தின் நோக்கத்தைப்பற்றி முடிவுரையில் கூறி ஆசனத்தில் அமர்ந்தார். பின் சந்தனம் புஷ்பம் தாம்பூலம் வழங்கி கூட்டம் 8-மணிக்கு முடிவுற்றது என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

---

## மதிப்புரை.

(லி. ரா.)

### உறங்கினேன் விழித்தனன் அல்லது காலத்தின் கோலம்.

இந்நூல் ஸ்ரீமதி சரோஜினி தேவியின் இளைய சகோதரர் ஸ்ரீமான் ஹரேந்தரநாத் சாத்தோபாத்யாயா ஆங்கிலத்திலெழுதிய "The Sleeper Awakened" என்னும் சிறு நாடகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. விவசாயத்தின் பெருமை, கதராடையின் மகிமை, மதுபானத்தின் கொடுமை, ஆத்ம சக்தியின் வலிமை ஆகிய இவ்விஷயங்கள் கூடியவரை நன்றாக விவரிக்கப்பட்டிருக்கின்றன.

விலை அணா 4

கிடைக்குமிடம்:—

ஸ்ரீவீரராகவ புத்தகசாலை,
புக் செல்லர்ஸ் & பப்ளிஷர்ஸ்,
1, கிருஷ்ணப்ப நாயக்கன் அக்கிரஹாரம்,
சென்னை.

---

### வண்ணத்திரட்டு:

பல வித்வான்கள் பாடிய இவ்வண்ணத்திரட்டு ஒருவாறு பதங்களைப் பிரித்து, முன் இருந்த சில வழுக்களைக் களைந்து, சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழாசிரியர் ஸ்ரீமான் கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் எழுதிய வண்ண இலக்கணமும், ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி ஸ்வாமிகள் அருளிச் செய்த வண்ண இலக்கண சூத்திரமும் சேர்த்துப் புதிதாகப் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது.

விலை அணா 8.

கிடைக்குமிடம் :—

"மாறன்" தமிழ்நூற் பதிப்புக் கழகம்,
புரசை, சென்னை.

---


## 'ஆநந்த விஜயன்'

(தேசீய மாதாந்தப் பத்திரிகை.)

மூவாண்டுகட்கு முன்னர் பாளையங்கோட்டையினின்றும் ஸ்ரீமான் டி. மாசிலாமணி நாடார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு "ஆநந்த விஜயன்" ஊழியம் புரிந்தமை நேயர்களுணர்ந்திருக்கலாம். இது "திராவிடன்" "தமிழ் நாடு" "குடி அரசு" முதலிய பத்திரிகைகளில் உதவி ஆசிரியராயிருந்த ஸ்ரீமான் தாமஸ் பாலையா பிள்ளை அவர்களை ஆசிரியராகக் கொண்டு, தற்போது ஈரோட்டினின்றும் வெளி வருகிறது. தேசீய விஷயங்களும் இதர முக்கிய விஷயங்களும் பல அறிஞர்களால் எளிய நடையில் எழுதப்பட்டு வெளிவரலால் தமிழ் மக்கள் எல்லாரும் நன்கு ஆதரித்து ஆசிரியருக்கு ஊக்கம் ஊட்டுவாராக.

வருட சந்தா.

| | | |
|---|---|---|
| உள் நாட்டுக்கு வருட சந்தா | | ரூ. 1— 8—0 |
| வெளி நாட்டுக்கு | ,, | ரூ. 1—12—0 |
| மாணவர் மாணவிகளுக்கு | ,, | ரூ. 1— 0 —0 |

விலாசம் :—

"ஆநந்த விஜயன்" ஆபீஸ் ஈரோடு.

## 'உ யபாரதி.'

சேரமாதேவியிலிருந்து மாதந்தோறும் வெளிவரும் ஓர் தேசியத் தமிழ்ப் பத்திரிகை. ஆசிரியர் : ராமஸ்வாமி ஐயங்கார், கல்வி சமூகம், பொருளாதாரம், அரசியல் முதலிய வழிகளில் தமிழர் முன்னேற்றமே தன்னோக்கமாகக் கொண்டிருப்பதைச் சரிவர நிறைவேற்றும் என நம்புகிறோம்.

உள் நாட்டுக்கு வருடம் 1-க்கு ரூ. 1-8-0
வெளி நாட்டுக்கு " ரூ. 2-0-0

விலாசம்:—காரியஸ்தர்,
"உதயபாரதி" காரியாலயம்,
சேரமாதேவி.

## 'ஆரம்பாசிரியன்.'

ஒரு மாதாந்தரப் பத்திரிகை.

இது சென்னை மாஹாண ஆரம்பாசிரியர் ஆசிரிய—மானேஜர் சங்கத்தி னின்றும் ஸ்ரீமான் ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ. எல். டி. அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளி வருகிறது. ஆரம்பாசிரியருக்கு வேண்டிய பல முக்கிய விஷயங்கள் காணப்படுகின்றன. வருட் சந்தா ஒரே ரூபாய்.

கிடைக்குமிடம் :—
ம. சண்முகசந்தர முதலியார், எம்.ஏ.எல்.டி.
" ஆரம்பாசிரியன் " பத்திராதிபர்,
200, தம்புச்செட்டி தெரு, சென்னை.

## சோற்பொருள் விளக்கம்
என்னும்
## சோதிடப்பேரகராதி

61வருஷ பஞ்சாங்கம் ஆக்கிய மதுரை சோதிட வித்வான், எஸ். கூடலிங்கம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது. தமிழ் சோதிடர்கள் இதுவரை காணாத புதிய மிகப் பயனுள்ள நூல். காலஞ் சென்ற ஸ்ரீமான் எல். டி. சுவாமிக்கண்ணு பிள்ளை அவர்களால் பாராட்டப் பெற்றது. சோதிடருக்கு இன்றியமையாத ஓர் அற்புதமான நூலாகும்.

விலை ரூ. 2—4—0

கிடைக்குமிடம்:—
எஸ். கூடலிங்கம் பிள்ளை,
புத்தகவியாபாரம், புதுமண்டபம், மதுரை.

## சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்.)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம் குடும்ப ரஹஸியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.



64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1.

மாணிக்க விலாஸம் பிரஸ்,
அருணசல முதலி வீதி, மதராஸ்


## எதுவேண்டும்?

| | |
|---|---|
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | ரூ. 2—4 |
| கர்ப்ப சாஸ்திரம் | 1—8 |
| மனோவசிய சாஸ்திரம் | 1—8 |
| ரதி சாஸ்திரம் | 1—4 |
| ஸதிரீ புருஷ ரகசியம் | 1—0 |
| சதிபதிகளின் மர்மம் | 1—0 |
| சரீர மர்ம சாஸ்திரம் | 1—0 |
| ரதிமதன சிங்கார ரஹஸ்யம் | 1—0 |
| மதனரதி ரஹஸ்யம் | 1—0 |

இன்னும் எல்லாவித தமிழ்ப் புஸ்தகங்களும் எம்மிடம் கிடைக்கும். வி. பி. சட்டமில்லாதவெளிநாட்டு நேயர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

இனும் ! இனும் !!
டேபில் டயம்பீஸ் இனும் !!!



(திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.)

எங்கள் 22 காரட் ரோல்டு கோல்டு "கோல்டன்" அழகிய கைக்கடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின்பேரில் வைக்கக் கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனமாக அனுப்பப்படும். இரண்டுக்கும் ஐந்து வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள். இனும் டைம்பீஸுடன் ரிஸ்டு வாட்ச் விலை ரூ. 7. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நண்பர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்ப வேண்டும். விலாசம்:—

தி பான்ஸி வாட்சு அவுஸ்,
15-A பீட், அண்ணா பிள்ளைத் தெரு,
மதராஸ்.

"பணம் சம்பாதிக்கப் பாதைகள் 200"
என்னும்

## 200 தொழில் முறைகள்.

4 பாகங்கள், 34 அத்தியாயங்கள்.

சொற்ப தொகையினால் சோப், செண்டு முதலியவைகளைச் செய்ய ஆரம்பித்தவர்கள் இப்போது லட்சாதிபதிகளாய் இருக்கிறார்கள். பீச்சாம் ஹாலோவே முதலிய சிலர் பேர்போன மருந்துகளைச் செய்து கோடீஸ்வரர்களாக ஆகிவிட்டார்கள். இதுபோன்ற தொழில்களை நீங்கள் ஏன் சுலபமாய் ஆரம்பிக்கக்கூடாது.

200 அபூர்வ தொழில்களின் செய்முறைகளடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 4—0—0. வி. பி. சார்ஜ் வேறு.

இதன் முழு விவரமடங்கிய 14 பக்கம் துண்டுப்புத்தகத்திற்கு 1 அணா ஸ்டாம்புடன் எழுதவும்

ஆர்ட் புக்ஸ் பப்ளிஷிங் கம்பெனி,
26, திருச்சினாப்பள்ளி.

## சேலம்
## மருத்துவர்குல சங்கம்.

சேலம் தியசாபிகல் சொஸைட்டி ஹாலில் 31—10—26ஷ ஞாயிற்றுக் கிழமை மாலை ஸ்ரீமான் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் தலைமையின்கீழ் சேலம் ஜில்லா மருத்துவகுல சங்கத்தாரின் மஹாநாடு ஒன்று கூடியது. உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் பல அங்கத்தினர் வந்திருந்தனர். ஸ்ரீமான்கள் கோபால செட்டியார், ராமசாமி பிள்ளை, முனிசிபல் அங்கத்தினர் ஏ. வையாபுரி பண்டாரம், சேலம் பூபதி, சி. பி. கந்தசாமி பிள்ளை முதலியோர் பேசினார்கள். இந்துமத பரிபாலன மசோதாவை ஆதரிப்பதாயும், இக்குலத்தார் ஆலயங்களில் பிரவேசியாமலிருப்பதை நிவர்த்திக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்வதாயும், ஸ்ரீமான் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களை சென்னை சட்டசபை அங்கத்தினராக நாமிநேஷன் செய்யுமாறு மே. த. கவர்னர் பிரபுவைக் கேட்டுக்கொள்வதாயும், "ஹிந்து" பத்திராதிபர் ஸ்ரீமான் எஸ். ரங்கசாமி ஐயங்கார் சென்னை ஸ்ரீமான் சீனிவாச நாயகர் ஆகிய இருவரும் காலஞ் சென்றமைக்கு வருத்தங் காட்டுவதாயும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டனவென்று காரியதரிசி ஸ்ரீமான் சுந்தரம்பண்டிதர் அறிவிக்கிறார்.

### கும்பாபிஷேக மகோற்சவம்.

சேலம் ஜில்லா ஆத்தூர் தாலூகா எத்தாப்பூர் ஸ்ரீ சாம்ப மூர்த்தி ஈஸ்வரர் ஸ்ரீ லெக்ஷிமி வேணு கோபால சுவாமி கோவில்களின் கும்பாபிஷேக மகோற்சவம் அக்டோபர் 27ம் தேதி புதன்கிழமை காலையில், ஆகம விதிகளை அநுசரித்து உத்தம பண்டிதர்களால் வெகு விமரிசையாக நடைபெற்றது. இதற்குக் காரணமாகயிருந்தவர் சேலம் வக்கீல்கள் திருமிகு பி. வி. நரசிம்மையர் சேஷையர் இன்னும் பலருமாவர். கோயம்புத்தூர் சேலம் நீலகிரி ஜில்லாக்களின் இந்துமத பரிபாலன போர்டு இன்ஸ்பெக்டர் திரு. ஜே. எம். சோமசுந்திரம் பிள்ளை அதற்கு முந்தின தினமே வந்து விக்கிரகங்கள் ஸ்தாபனம் செய்யவும் மற்றும் யாவும் செவ்வையாக நடை பெறவும் காரணமாயிருந்தார். அவருடைய வருகை யாவருக்கும் திருப்தியை உண்டாக்கியது. மகோற்சவம் இனிதாக நடைபெற்றது. நமது மதாலயங்களில் இப்போதைய இந்துமத ஜனசமூகங்கள் மறுபடியும் ஊக்கங் காட்டப் புகுந்திருப்பது கொண்டாடத்தக்கது. இதற்கு முந்தின மாதமே எத்தாப்பூருக்கு 2 மைலுள்ள பெத்த நாயக்கன் பாளையம், ஸ்ரீ ஆத்ம நாத சுவாமியின் ஆலயம் ரூ. 20000 செலவிட்டு புதிதாகக் கட்டுவித்து கும்பாபிஷேகமும் நடை பெற்றது. நமது மதஸ்தாபனங்கள் விர்த்தியடையவும் நமமவர் தெய்வ பக்தியில் சிறக்கவும் இறைவன் அருள் புரிவானாக என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற

## ராஜவைத்திய ஆஸ்ரமம்.

சாஸ்வதி விலாசம் பிரஸுக்கு எதிரில் செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மேகரணங்கள், வெள்ளை வியாதி, ராஜபிளவை, கட்டிகள், நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல் சௌக்கியம் செய்யப்படும். விபரத்திற்கு எழுதுங்கள்

ஆயிரக்கணக்கான

## மூலவியாதியஸ்தர்கள்

சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.



குறைந்த வட்டி! மிகுந்த லாபம்!! சிறந்த பாங்கு!!

கோயமுத்தூர்

## இந்தியர் கஷ்ட நிவாரணபாங்கு, (Ltd.,)

(1924-வரு டிசம்பர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.)

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ... ... | ரூ. 5,00,000—0—0 |
| வெளிவிடப்பட்ட பங்குகள் 7,390-க்கு... | ... | ரூ. 73,900—0—0 |
| தவணைகளின்படி வசூலிக்கப்பட்டது ... | ... | ரூ. 50,430—0—0 |
| டிபாசிட்டுகள் | ... ... ... | ரூ. 86,346—7—4 |
| Reserve Fund காப்புத் திரவியம் | ... | ரூ. 2706—0—C |
| நடை முதல் தொகை | ... ... ... | ரூ. 1,50,275—9—5 |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விகிதத்திற்கு பெற்றுக்கோள்ளப்படும்.

**சேவிங்ஸ்பிக்சேட் டிபாசிட்டு இரண்டு வருஷ கேடுவு:**—வட்டி 100-க்கு மாதம் 1க்கு 0—10—0 அணா. இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

**பிக்சேட் டிபாசிசிட்டு ஒரு வருஷ கேடுவு:**—வட்டி 100க்கு மாதம் 1க்கு 0—9—0 இதற்கு வருஷத்திற்கொருமுறை வட்டி கொடுக்கப்படும்.

(1) இப்பாங்கின் பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே, 100-க்கு மாதம் 1-க்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது.

(2) பங்கு 1-க்கு 10 (பத்து ரூபாய்) வீதம், 10 பங்குகளுக்கு குறையாமல், 10, 20. 30 என்கிற முறையே, எத்தனை பங்குகள் வேண்டுமானாலும் கொடுக்கப்படும். பங்குகள் (அலாட் செய்யும்போது பங்கு 1க்கு ஒரு ரூபாய் வீதமும் பிரவேசதனம் பங்கு 1க்கு 0—8—0 எட்டணா) வீதமும் ரூல்ஸ் புஸ்தகத்திற்காக 0—6— அணாவும் செலுத்தவேண்டும்.

(3) பத்து பங்குகள் உடைய பங்குக்காரர், பர்ஸனல் இன்வெஸ்டுமெண்டு டிபாசிட் ஒன்றுக்காக, 25 மாதத் தவணைகளில் மாதம் 1-க்கு 2—0—0 (இரண்டு ரூபாய்) வீதமும் பிரவேசதனம், ரண்டுக்கிரயம் ரூபாய் 2—8—0 செலுத்தலாம், அல்லது ஒரே தடவையிலாவதும் ரூபாய் 52—8—0 செலுத்தி விடலாம். ஒருவர் எத்தனை டிபாசிட்டுகள் வேண்டுமானாலும்செலுத்தி வரலாம்;

(4) மேற்கண்ட டிபாசிட்டுக்கு பூரா தொகையும் பிரதி வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதிக்குள்செலுத்தப்பட்ட டிபாசிட்டர்களுக்கு, பிரதி வருஷத்திலும், மேற்படி நெம்பரை பிரைஸ் சீட்டில் சேர்த்து வாசிக்கப்படும்.

(5) மேற்கண்ட பிரைசில் பிரைஸ் கிடைத்த டிபாசிட்டருக்கு ஒவ்வொரு பிரைசுக்கும் ஒவ்வொரு டிபாசிட்டருக்கும், அவர் பங்குடையவரானால் ரூபாய் 250—0—0 தனி டிபாசிடரானல், ரூபாய் 125—0—0 இரண்டு வருஷ கெடுவிற்கு வட்டியில்லாமலும்,ஜாமீன் இல்லாமலும் கடன் கொடுக்கப்படும். டிபாசிட்டர்கள் இறந்து போனாலும், அவர் பங்கு உடையவரானால், ஒவ்வொரு டிபாசிட்டிற்கும் ரூபாய் 250—0—0 வீதமும் தனி டிபாஸிடரானல், ஒவ்வொரு டிபாசிட்டுக்கும் ரூபாய் 125—0—0 வீதமும், பாங்கின் சட்டப்புஸ்தகம் 3வது பக்கம் (உ) பிரிவின்படி போனசும் கொடுக்கப்படும்.

கோயமுத்தூர், 22—9—26.

ஜி. ராமச்சந்திர செட்டியார்,
மானேஜிங் டைரக்டர்.



ஸ்ரீவில்லிபுத்தூர்

## பி. பி. அன்ஸன்

பிஸ்கட் பாக்டரி

குழந்தைகளுக்குத்தகுந்தஆகாரம்

**அரரூட் பிஸ்கட்.**

சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது.

**ரூஸ்பரி பிஸ்கட்.**

புஷ்டியைக் கொடுக்கக் கூடியது.

**பழம் கேக்.**

எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்

P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.





பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், ரூம், தனித் தனி சாமான்யாவும் விலைசயமாய் கிடைக்கும். கேட்டலாக் இனாம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.



ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்தனாதி தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. சிலவு வேறு.

## சலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிபடுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும்.பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபாற் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி



## ஜீர்ணாமிர்தம்.

தங்கம் சேர்ந்த ருஜிகர ராஜ ஔஷதம்.

அஜீர்ணத்தையும், மலச்சிக்கலையும் நன்கு கண்டித்து நல்ல பசியையும் ஜீர்ண சக்தியையும் தரும். தேகம் வலுபடும். பித்தம், இருமல், வயிற்றுப் பிசம், குத்தல், மூலம், பீனிசம், மார்பெரிச்சல், வாசம், புளியேப்பம், ஜ்வரகாசங்கள் முதலிய வற்றை உடனே குணபடுத்தி விடும். நல்ல ரத்த விருத்தியையும் தேக புஷ்டியையும் தரும். டின் 1-க்கு ரூ. 1. டின் 2-வரை வி. பி. அணா 5.

பிரஜானுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.

## மின்சார ரசம்.

### எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.**

## மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.



வித்வத்வம்! அநுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

எமது **"ஆநந்த குண போதினி."**

ஆநந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு.

வருஷ சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0
சித்திரை மாதத்திலிருந்து வெளிவந் துலவுகிறது.

டி. இராஜகோபால் முதலியார்,
ஆநந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.



ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே ஏன் கவலைப்படுகிறீர்கள்?
27000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

**ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி.**




தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 8-ம் பதிப்பு 800 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது. இவ்வெட்டாம் பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு $1\frac{1}{2}$ ரூபாய் முதல் 3000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்கு போடப்பட்டிருக்கிறது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1- கு விலை ரூ. 2—0—0.
அந்நிய நாட்டார் முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. இராஜகோபால் முதலியார், நெ. 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.



பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

**மஹா சந்தனாதித் தைலம்**

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை



இனம் இனம்!!

**ரகஸ்ய ரத்னம்**

அல்லது

ஒழுக்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள். இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மதராஸ்.


கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயககரால் வெளியிடப்பட்டது.